

# BIBLE & MYTHOLOGY






# வேதமும் புராணமும்

# வேதமும் புராணமும்

## BIBLE & MYTHOLOGY

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரரே இன்று,

**இந்த உலகத்தின் மனுக்குலம், தன்னை படைத்தவரை பற்றி தெரியாமல், கண்ணுக்கு தோன்றும் எல்லாவற்றையும் தேவன் என்றும், கடவுள் என்றும், அது நம்மை காக்கும் என்றும், நம்பி அவற்றை வழிபடுகிறார்கள்....**

➔ இந்த **நம்பிக்கை** உலக முழுவதும் இவ்வாறு பரவக்கராணம் என்ன?

➔ **எப்படி** பரவினது?

➔ **யாரால்** பரவினது?

இந்த மூடநம்பிக்கைக்கும் பின்வரும் வசனத்துக்கும் சம்பந்தம் இருக்கிறதா? இதை வசனத்தை வாசித்து அறிந்துகொள்ளலாம்

| 2கொரிந்தியர்-4:4 |
|---|

“தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய **மனதைக் குருடாக்கினான்.**”

**இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தான், நயவஞ்சகமான தந்திரங்கள், மூலம் அவர்களை வழிநடத்தி எல்லோருடைய மனக்கண்களையும் குருடாக்கி வைத்து விட்டான் என்று பார்க்கிறோம்.**

**இந்த பார்வையில் நம்மை சுற்றி இருக்கிற அந்நிய தேவர்கள், விக்கிரகங்கள் பற்றி கொஞ்சம் சிந்திக்கும் போது வேதத்திலுள்ள உண்மையை நமக்கு தேவன் தெரிய வைக்கிறார்.**

## ➔ ....வேதமும் புராணங்களும்....

என்ற இந்த தலைப்பு, ஆராய்ச்சிக்குரிய தலைப்பாக இருந்து, சில விஷயங்களில், நமக்கு போதிய அறிவு தருவதாகவும், சில விஷயங்கள் சாட்சியாகவும் இருந்து, இன்னும் அதிகமாக நம் தேவன் மேல், விசுவாசம் வைக்க, நமக்கு உதவியாக இருக்கும். புராணங்கள் என்று எடுத்தால் மேலோட்டமாக எல்லாமே கட்டு கதை போல இருந்தாலும், கூர்ந்து கவனித்தால் ஏதோ ஒரு, **வரலாற்று சான்று** இருக்கிறதை நாம் பார்க்க முடியும்.

வேதத்தில் சில வசனங்கள், சில பெயர்கள், நாம் படித்திருந்தாலும், இது வரைக்கும் நாம் அறியாத, விளங்காத பெயர்கள், சம்பவங்கள், புராணங்கள் சம்பந்தப்படுத்தும் ஆட்களை பற்றி புரிந்துக் கொள்ள உதவியாக இருக்கும்.

புராணங்களின் தோற்றம் என்று பார்த்தால், **பெரிய 3 ராஜ்யங்கள்** இருக்கிறது.

➔ **பாபிலோன்.**

➔ **எகிப்து.**

➔ **கிரேக்கம்.**



பாபிலோன்



எகிப்து



கிரேக்கம்

இங்கிருந்து தான் உலக மக்கள் கடைபிடிக்கிற கடவுள் நம்பிக்கைகளும், அதற்கு பக்கபலமான புராணங்களும் அதன் விஷயங்கள் தோன்றியது. இந்த மூன்று ராஜ்யங்கள், இப்போதிருக்கிற வளரும் நாடுகளைக் காட்டிலும், எல்லா விதத்திலும், அபரிமிதமாக வளர்ச்சியடைந்த ராஜ்யங்கள். அவர்கள் கட்டிய கட்டிடங்கள், இன்னும் கூட நம்ம மத்தியில் பேசப்படும்படியாக இருக்கிறது. அதே போல கட்ட இன்றைக்கு இருக்கிற நவீன வசதிகளால் கூட முடியாது.

அந்த அளவு நாகரீகத்திலும், அறிவிலும் வளர்ந்திருந்த அந்த ஜனங்கள், தங்களுடைய கடவுள் நம்பிக்கைக்கு பின்னால சில புராணங்களையே நம்பியிருந்தாங்க. அப்படிப்பட்ட அறிவில் சிறந்த அவர்களோட உறுதியான புராணங்களை மையமாகக் கொண்ட கடவுள் நம்பிக்கைக்கு, ஏதாவது ஒரு சில விஷயங்கள், சம்பவங்கள் நியாயமானதாக இருந்திருக்கும். அவர்கள் நம்ம மத்தியில வாழ்த்துகொண்டிருக்கிற, ஜனங்கள் மாதிரி, வெறும் புராணக் கதைகளை, மாத்திரம் நம்புவதற்கு வாய்ப்பு இல்லை.

➔ நாம் இதை பற்றி....கொஞ்சம் சிந்திக்கனும்.

இதற்கு பைபிள் இருக்கனும் ஒரு பக்கத்தில, சுற்றி இருக்கிற ஜனங்கள், அக்கம் பக்கத்திலுள்ள நாடுகள் கொண்டிருக்கிற கடவுள் நம்பிக்கைகள் குறித்து, பரிட்சயமான அறிவு

**இருக்கவேண்டும் மறுபக்கத்தில, அப்படி இவற்றை வேதத்தோடு Compare பண்ணும் போது, நாம இன்றைக்கு சில விஷயங்கள் புரிந்து கொள்ளலாம். சில வசனங்களுடைய அர்த்தம் தெரிந்து கொள்ளலாம்.**

**அதைத்தான் இந்த ஒரு தலைப்பில் நாம் பார்க்கப் போகிறோம்.**

**(மித்தாலஜி அன்டு தி பைபிள்)**

➔ வேதமும் புராணங்களும்.

**தேவன் நியாயப்பிரமாணம் கொடுக்கும் போது, "என்னை தவிர உங்களுக்கு வேறே தேவன் வேண்டாம்". அதே சமயத்துல "எந்த விக்கிரகங்களும் நீங்க உண்டாக்க வேண்டாம்" என்று சொல்லிருந்தார். ஆனால் இஸ்ரேயல் ஜனங்கள், அப்பப்ப, தேவனை விட்டு விலகி போய், விக்கிரகங்களை வணங்கிடுறாங்க. அந்நிய தேவர்களை வணங்கிடுறாங்க. இது பழைய ஏற்பாடு முழுவதும் பதிவாகியிருக்கிறது. உதாரணத்துக்கு, ஒரு சில வசனங்களை பார்க்கலாம்.**

எரேமியா-44:15-19

"அப்பொழுது தங்கள் ஸ்திரீகள் **அந்நியதேவர்களுக்குத்** தூபங்காட்டினதாக அறிந்திருந்த எல்லாப் புருஷரும், பெரிய கூட்டமாய் நின்றிருந்த எல்லா ஸ்திரீகளும், எகிப்துதேசத்தில் பத்ரோசிலே குடியிருந்த சகல ஜனங்களும் எரேமியாவுக்குப் பிரதியுத்தரமாக: நீ கர்த்தருடைய நாமத்தில் எங்களுக்குச் சொன்ன வார்த்தையின்படியே நாங்கள் உனக்குச் செவிகொடாமல், எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள் செய்து, **வானராக்கினிக்**குத் தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளைவார்ப்போம்; நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதா பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம்; அப்பொழுது நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம். நாங்கள் **வானராக்கினிக்குத்** தூபங்காட்டாமலும், அவளுக்குப் பானபலிகளை வார்க்காமலும் போனதுமுதற்கொண்டு, எல்லாம் எங்களுக்குக் குறைவுபட்டது; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோனோம். மேலும் நாங்கள் வானராக்கினிக்குத் தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்த்தபோது, நாங்கள் எங்கள் புருஷரின் அநுமதியில்லாமல் அவளுக்குப் பணியாரங்களைச் சுட்டு, பானபலிகளை வார்த்து, அவளை நமஸ்கரித்தோமோ? என்றார்கள்."

**மற்றும்....**

எரேமியா-7:17-19

"யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் அவர்கள் செய்கிறதை நீ காணவில்லையா? எனக்கு மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்க்கிறார்கள்; அவர்கள் **வானராக்கினிக்**குப் பணியாரங்களைச் சுடும்படி பிள்ளைகள் விறகு பொறுக்குகிறார்கள், பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள், ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள். அவர்கள் எனக்கா மனமடிவுண்டாக்குகிறார்கள்? தங்கள் முகங்கள் வெட்கத்துக்குட்படும்படி அவர்கள் தங்களுக்கே அல்லவோ மனமடிவுண்டாக்குகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."

**பாடத்தின் முடிவில், இந்த வசனங்களுடைய அர்த்தம் நாம் புரிந்துக் கொள்ளலாம். தேவன் எரேமியாவுக்கு "என் ஜனமாகிய இஸ்ரேயல் ஜனங்கள் எப்படி அவர்கள் சோரம் போயிருக்கிறார்கள்!", என்று காண்பிக்கிறார். "அவர்கள் என்னை ஆராதிக்கிறது இல்லை. என்னை வணங்குவதை விட்டுட்டு,**

☞ **'வானராக்கினி' ஆங்கிலத்தில்** 'The Queen of Heaven'

**இது ஒரு தெய்வம் என்று விக்கிரகத்தை வணங்குறாங்க". நமக்கு ஒரு கேள்வி வருது,**

➔ யார் இந்த வானராக்கினி?

**தேவனை அறிந்த ஜனங்கள் அவரை விட்டுட்டு அவருடைய ஸ்தானத்தில், ஒரு அந்நிய, பெண் தெய்வத்தை, வணங்கிருக்காங்க. அதுக்கு பேர் வானராக்கினி. அடுத்ததாக நாம்.**

எசேக்கியேல்-8:3

"கைபோல் தோன்றினதை அவர் நீட்டி, என் தலைமயிரைப் பிடித்து என்னைத் தூக்கினார்; ஆவியானவர் என்னைப் பூமிக்கும் வானத்துக்கும் நடுவே கொண்டுபோய், தேவதரிசனத்திலே என்னை எருசலேமில் வடதிசைக்கு எதிரான உள்வாசலின் நடையிலே விட்டார்; அங்கே **எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தின் ஸ்தானம்** இருந்தது."

☞ **இங்க எசேக்கியேல் தீர்க்கதரிசிகிட்ட, ஒரு தரிசனம் காண்பிக்கிறார். அதில் இஸ்ரேயல் ஜனங்கள் செய்த அந்நிய வணக்கம் பற்றி பார்க்கும் போது, அந்த வசனத்தில் வட திசை நோக்கி, ஒரு விக்கிரகம் இருக்குது, அது எப்படிப்பட்ட விக்கிரகம்? எரிச்சல் உண்டாக்குகிற ஒரு விக்கிரகம். இது இஸ்ரேயல் ஜனங்களுக்கு மத்தியில இருந்திருக்கிறது. அதே போல வசனம்....**

எரேமியா-8:13,14

"பின்னும் அவர்கள் செய்கிற அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று அவர் என்னுடனே சொல்லி, என்னைக் கர்த்தருடைய ஆலயத்து வடக்கு வாசலின் நடையிலே கொண்டு போனார்; இதோ, அங்கே **தம்மூசுக்காக** அழுதுகொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்."

**இந்த வசனத்தில், இஸ்ரேயல் ஸ்திரிகள் "தம்மூசுக்காக" அழுது கொண்டிருந்தார்கள். இங்கு ஒரு விநோதமான பேர் பார்க்கிறோம்.**

**அடுத்து.....**

நியாயாதிபதிகள்-8:33

"கிதியோன் மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் **பாகால்களைப்** பின்பற்றிச் சோரம்போய், **பாகால்பேரீத்தைத்** தங்களுக்குத் தேவனாக வைத்துக்கொண்டார்கள்."

☞ **பாருங்கள், பாகாலை சேவித்து இருக்காங்க. அப்புறம், பாகால்பேரித்தை, தேவனாக வைச்சிருக்காங்க பார்க்கிறோம்.**

**அடுத்து....**

எரேமியா-32:35

“அவர்கள் **மோளேகு**க்கென்று தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணும்படி இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலிருக்கிற **பாகாலின்** மேடைகளைக் கட்டினார்கள்; யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணுவதற்கு அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யவேண்டுமென்று நான் அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அது என் மனதிலே தோன்றினதுமில்லை.



மோளேகு



பாகால்

**“பாகாலின்” மேடைகள், அங்கே “மோளேகை” வணங்கினர். இது எல்லாம், தேவனுடைய வார்த்தையில் இருந்து, நாம் பார்க்கிற விஷயம். அந்நிய ஜனங்கள், வணங்கிட்ட அந்நிய தேவர்கள், பற்றிய பதிவுகள்.**

**ஆனால் இவைகள் எங்க இருந்து இஸ்ரேயலுக்குள்ளே புகுந்தது?**

**இது தான் இன்னிக்கு ஒரு சின்ன ஆராய்ச்சி, அப்போ! அந்நிய தேவர்களாக, வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற, இந்த காரியங்கள் குறித்து, வேத வசனத்துல நாம் என்ன தெரிஞ்சிக்கலாம்?**

**இன்னும் ஒரு வசனம்**

நியாயாதிபதிகள்-2:11-13

“அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களைச் சேவித்து, தங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின

அவா்களுடைய தேவனாகிய கா்த்தரை விட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவா்களாகிய அந்நிய தேவா்களைப் பின்பற்றிப்போய், அவா்களைப் பணிந்துகொண்டு, கா்த்தருக்குக் கோபமூட்டினாா்கள். அவா்கள் கா்த்தரை விட்டு, **பாகாலையும் அஸ்தரோத்தையும்** சேவித்தாா்கள்.''

**அவர்கள் கர்த்தரை விட்டு பாகாலையும், "அஸ்டரோத்தையும்" வணங்கினாங்க. இந்த காரியங்கள் குறித்து தியானிக்க போகிறோம். ஒரு வேளை, உங்களுக்கு விநோதமாக இருக்கும், கண்டிப்பாக போக போக இது கூட ஒரு ஆசீர்வாதமாக இருக்கும்.**

**➔ ஏன் தேவன் இந்த பதிவுகள் எல்லாம் தந்திருக்கிறாருங்கிறது புரியும். இந்த விஷயங்கள் பார்க்கும் போது இந்த பிரபஞ்சத்தின் தேவன், எவ்ளோ ஞானமாக தேவனுடைய ஜனங்களை, தேவன் உண்டுபண்ணின இந்த மனுக்குலத்தை, அவரை விட்டு வழி விலக செய்ய பயன்படுத்தியிருக்கிற, "ஞானம்" நமக்கு புரியும். இது நமக்கு ஒரு தெளிவு தரும்.**

**☞ யார் இந்த அந்நிய தேவர்கள்?**

**☞ இவங்களுக்கு எங்காவது ஆதாரம் இருக்குதா?**

**பைபிளில் பாகால் என்று நிறைய படிக்கிறோம். அந்நிய தேவர்களில் ரொம்ப பேமஸ் பைபிளில் பாகால் வருவார். எங்க பார்த்தாலும் பாகால், பாகால், அஸ்டரோத் வர்றாங்க. யார் இவங்க?**

**கொஞ்சம் வெளி உலகத்தில் பார்த்தால், இவங்க இரண்டு பேரும், மற்ற பெயர்களில், எல்லா இடங்களிலும், வணங்கப்படுவதை பார்க்கலாம்.**

**என்ன ஆச்சர்யம் என்றால்,**

**போப் மார்க்கம் இன்றைக்கு வணங்குறது கூட, இந்த பாகால், அஸ்டரோத் தான், இது ரொம்ப ஆச்சர்யம். ஆனால் அவங்க யரையோ வணங்குறாங்கன்னு நாம் நினைப்போம். ஆனா! அவங்க வணாங்குறது இந்த பாகால் அஸ்டரோத்தான்-னு நாம கடைசில பார்க்க முடியும்.**

**☞ இப்ப இந்த விஷயங்களை எல்லாம் எப்படி புரிந்து கொள்வது?**

**முதல் விஷயம் இந்த போப் மார்க்கத்துல இருக்கு நிறைய விக்கிரக வணக்கம், அவங்க கிட்ட கண்டிப்பாக இருக்கு... விக்கிரகம், அதுக்கு மாலை வைக்கிறாங்க, கேண்டில் வைக்கிறாங்க, புனித நீர் வைக்கிறாங்க, மற்றும் பழமையான சம்பிரதாயங்களை செய்றாங்க இதெல்லாம், இந்த கிறிஸ்தவ மண்டலம், போப் மார்க்கத்துக்கிட்ட பார்க்கிற விஷயம்.**

**இது இன்னிக்கு நமக்கு நல்லா தெரியும்.**

**இந்த விஷயங்களை எல்லாம் இவங்க எங்கிருந்து எடுத்திருக்காங்க நம்ம பார்க்கும் போது அவர்களே ஒத்துக் கொள்றாங்க.**

➔ இது நாங்க அந்நிய ஜனங்கள் கிட்ட இருந்து எடுத்திட்டோம்னு சொல்றாங்க.

☞ தேவனை அறிந்திடாத ஜனங்களுடைய பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் சபைக்குள்ள போப் மார்க்கம் எடுத்திட்டாங்க. இதை குறித்து ஒரு **கார்டினல்** வந்து **நியாயம்** என்று கூட சொல்கிறார். இவைகளெல்லாம் **அந்நிய ஜனங்களுடைய பழக்கம்** தான், ஆனால் எப்போ இந்த பழக்கம் எல்லாம் **சபைகுள்ள** வந்ததோ, அந்த பழக்கமெல்லாம் **புனிதமாக்கப்பட்டது**ன்னு சொல்றாங்க.

☞இவங்க என்ன தான், இது மாதிரி சொல்லிட்டாலும், அவங்களுடைய அந்த சடங்காச்சாரங்கள், விக்கிரக வணக்கம், இதை **தேவன்** ஒரு போதும் **அங்கீகரிக்கிறதில்லை**. இதை **தேவன்** எப்படி கண்பிக்கிறார்னா! இந்த அமைப்புக்கு ஒரு பெயர்வைக்கிறார், என்ன பெயர்னா? பைபிள்ல போப் மார்க்கத்துக்கு என்ன பெயர்?

➔ **பாபிலோன், மகா பாபிலோன்.**

நீங்க என்னுடைய சபை இல்லை, நீங்க **மகா பாபிலோன்** சொல்லிட்டார். பாருங்கள்! விக்கிரக வணக்கம்,மற்றும் தேவனுக்கு விரோதமான செய்கைகள் நிறைஞ்சிருக்கிற சபையை, பார்த்து தேவன் அவங்களுக்கு ஒரு பெயர் சொல்லனும்கிற போது, அதுக்கு செலக்ட் பண்ணிட்ட பெயர் 'பாபிலோன்'. "நீ மகா பாபிலோன்" சொல்லிட்டார். அங்கிருந்து நமக்கு ஒரு க்ளு கிடைக்குது.

☞ ஏன் தேவன் இந்த மாதிரி அந்நிய விக்கிரகம் வணக்கம், இதை செய்கிற சபையை பாபிலோ-ன்னு சொல்லனும்?

அப்ப இதே போன்ற விஷயங்கள் எங்கயும் நடந்திருக்கனும்? பாபிலோன்-ல நடந்திருக்கனும். பாபிலோன் நமக்கு நல்லா தெரியும் அது ஒரு பண்டைய கால ராஜ்யம். அந்த பெயர்-ல ஒரு ராஜ்யம் இருந்தது.

☞ அது உலகம் முழுக்க ஆளுகை செய்திட்டு இருந்தது. அந்த ராஜ்யத்துல இதே போன்ற விஷயங்கள் இருந்தது. அதை **சரித்திரத்துல** போய் பார்க்கும் போது நமக்கு தெரியும். அதனால தான் அந்த பழைய பாபிலோன் குறித்து **எரேமியா தீர்க்கதரிசி** பேசின விஷயமும், அந்த பேரை தேவன் இன்னிக்கு சூட்டிருக்கிற போப் மார்க்கத்தைப் பற்றி யோவான் **வெளிப்படுத்தின விசேஷத்துல**, பேசிருக்கிறதையும் **ஒப்பிட்டு** பார்த்தோம்னா ஒரே மாதிரி இருக்கும். அதாவது பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசி சொன்ன, பாபிலோன்

**பெயரில் அழைக்கப்பட்ட அந்த ராஜ்ஜியத்துக்கும், இந்த போப் மார்க்கம் குறிச்சி சொன்ன விஷயங்களும், ஒரே மாதிரி இருக்கும்.**

எரேமியா-51:6-8

“நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்பிவியுங்கள்; இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது; அவர் அதற்குப் பதில் செலுத்துவார். பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் **வெறிக்கப்பண்ணினது**; அதின் **மது**வை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் **புத்திமயங்கிப்போனார்கள்**. பாபிலோன் சடிதியில் விழுந்து தகர்ந்தது; அதற்காக அலறுங்கள்; அதின் நோவை ஆற்றப் பிசின் தைலம் போடுங்கள்; ஒருவேளை குணமாகும்.”

☞ **இங்க அந்த பழைய ராஜ்ஜியமாக இருந்த பாபிலோன் கர்த்தருடைய கையில், ஒரு பொற்பாத்திரம் போல இருந்து, பூமி அனைத்தையும் வெறிக்கப் பண்ணினது. இதையே இப்ப ஆவிக்குரிய பாபிலோனுக்கு நாம பாத்தா கிளியரா பொருந்தும்.அது ஆரம்பத்தில், ரொம்ப விசேஷமான தேசமாக இருந்தது, அங்கிருந்து ஒட்டு மொத்த உலகத்துக்கும் வெறிக்க செய்கிற காரியங்கள் போய்டுச்சி, அதே போல....**

வெளி-17:4,5

“அந்த **ஸ்திரீ** இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் **வேசித்தனமாகிய** **<u>அருவருப்புகளாலும்</u>** **<u>அசுத்தத்தாலும்</u>** நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள். மேலும், **இரகசியம், மகா பாபிலோன்**, வேசிகளுக்கும் பூமியிலுள்ள **<u>அருவருப்புகளுக்கும் தாய்</u>** என்னும் நாமம் **அவள் நெற்றியில்** எழுதியிருந்தது.”

➔ **இங்க போப் மார்க்கத்தை பற்றி பேசும் போது கூட, ஒரே விஷயம் தான் சொல்றாங்க. போப் மார்க்கம் கூட விசேஷமான பாத்திரமாக இருந்தது. ஆனால் இந்த போப் மார்க்கம் கூட, ஜாதிகளை வெறிக்க செய்திட்டாங்க. லிட்ரல் பாபிலோனுக்கு பேசப்பட்ட விஷயங்கள் அப்படியே சிம்பாலிக் பாபிலோன், அடையாளமாக சொல்லப்பட்ட பாபிலோனாகிய போப்மார்க்கத்துக்கு, ஒத்து இருக்கிறதை பார்க்கிறோம். <u>அந்த லிட்ரலான பாபிலோன் அழிந்து போய்டுச்சி</u> அதே போல் இந்த சிம்பாலிக் பாபிலோன், போப் மார்க்கம் கூட அழிந்து போகும். திரும்பி எழும்பவே எழும்பாது இதெல்லாம் தேவன் வேதத்தில் சொல்லிருக்கிற விஷயம்.**

**தேவன் போப்மார்க்கம் பற்றி சொல்லும் போது விக்கிரக வணக்கம், கள்ள போதனை நிரம்பி இருக்கிறது, அப்ப அந்த உண்மையான ராஜ்யம் பாபிலோனிலும் இதெல்லாம் காணப்பட்டிருக்கனும்.**

**கொஞ்சம் பின்னோக்கி போய்ட்டு,....**

➔ அந்த பாபிலோன் எப்படி இருந்துச்சி?

என்று பார்க்க முயற்சிக்கிறோம். வசனங்களில், போய் பார்த்தால், ஒரு **ஆச்சர்யமான!** உண்மை இருக்கு.


முதல் உலகம் ஜலப்பிரளயத்தில் அழிந்தது.

இரண்டாம் உலகம் ஆரம்பித்தது - நோவா, அவருடைய பசங்க மூலம், இரண்டாம் உலகத்துக்கு பின்பு பூமில தோன்றின, முதல் பட்டணம் அல்லது முதல் நகரம் அல்லது

**"முதல் ராஜ்யம் பாபிலோன்"**

ஆதியாகமம்-10:8-12

"கூஷ் **நிம்ரோதைப்** பெற்றான்; இவன் பூமியிலே பராக்கிரமசாலியானான். இவன் கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனாயிருந்தான். ஆகையால், **கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனான நிம்ரோதைப்போல** என்னும் **வழக்கச்சொல்** உண்டாயிற்று.



சிநெயார் தேசத்திலுள்ள **<u>பாபேல்</u>**, ஏரேக், அக்காத் கல்னே என்னும் இடங்கள் அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதிஸ்தானங்கள். அந்தத் தேசத்திலிருந்து **<u>அசூர்</u>** புறப்பட்டுப்போய், **நினிவே**யையும், ரெகொபோத் பட்டணத்தையும், காலாகையும், நினிவேக்கும் காலாகுக்கும் நடுவாக ரெசேனையும் கட்டினான்; இது பெரிய பட்டணம்.''



பாபேல் (பாபிலோன்)

➔ கூஷ் நிம்ரோதை பெற்றான். நிம்ரோத் பராக்கிரசாலியாக இருந்தான். இவன் கர்த்தருக்கு முன்பாக மிகுந்த பலத்த வேட்டைக்காரனாக இருந்தான். இங்க நிம்ரோதை பற்றி சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். இரண்டாம் உலகம் ஆரம்பித்த பின்பு, கொஞ்ச நாளில், உலகத்துல நிம்ரோத் ஒரு **"பாப்புலரான"** பேர் பராக்கிரமசாலியாக இருந்தான். எந்த மாதிரி என்றால் 'கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரன்'.

அவன் பேரில் ஒரு பழமொழி சொல்கிற அளவுக்கு கூட அவர் பிரபலமாக இருந்துட்டான்.

➔ அப்படி, இவன் என்ன தான் பண்ணிட்டான்?

முதல், முதல் ஒரு பட்டணம் உண்டாக்கினார் "பாபேல்". அடுத்து சில பேர்கள் சொல்லப் பட்டிருக்கு. ஆனா இந்த வசனம் அருமையான <u>Clue</u>. பாபேல் அதாவது பாபிலோன் தான் முதல் **முதல்** உருவாகிட்ட **சிட்டி**, ஜனங்கள் ஒரு நாலு ஜோடில இருந்து உருவானாங்க. நோவா நோவாவின் மனைவி நோவாவின் மூன்று பசங்க அவங்க மனைவிகள். இந்த நான்கு ஜோடில இருந்து மனுக்குலம் ஆரம்பிக்குது. அப்புறம் கொஞ்சம், கொஞ்சமா பெருகி, ஒரு சின்ன பட்டணம் போல உருவாகுறாங்க.


☞அப்ப அதை உருவாக்குறது நிம்ரோத், 'பாபேல்' என்ற பேர் வைக்கிறார்.

இப்ப தேவன் சொல்றாங்க, பாபிலோன் எப்படி இருந்திருக்கனும், சகல வித அருவெறுப்புகளாலும், நிறைந்திருக்கனும் அதனால தான் அந்த பேரை தூக்கி, அதே போல சகல விதமான **ஆவிக்குரிய அருவெறுப்பு**கள் நிறைந்திருக்கிற, **போப் மார்க்கத்துக்கு**

பாபிலோன் என்று சொல்றார். இப்போ நம்மை சுற்றி இருக்கிற அத்தனை அருவெறுப்புகள், அத்தனை அந்நிய தேவர்கள், புராணங்கள், யாவற்றிற்கும் பாபிலோனுக்கும் எதோ ஒரு வகையில தொடர்பு இருக்கனும்,

இது தான் நம்ம தியானிக்கப் போகிறோம்.

முதலாம் உலகம் அழிந்து போனதுக்கு பின், ஒரு புது ஆரம்பம், இரண்டாம் உலகம். ஆனால் இரண்டாம் உலகத்தில், கர்த்தருக்கு முன்பாக ஒரு பராக்கிரமசாலி இருக்கிறார், அவர் உருவாக்குகிறார், முதல் பட்டணம் பாபேல். தேவன் சொல்றாங்க, அந்த பட்டணம் முழுதும் அருவெறுப்புகள் நிறைந்திருக்கிறது. நிம்ரோத்- பாபிலோன், அருவெறுப்பு விக்கிரகம்- அந்நிய தேவர்கள் வணக்கம், இந்த ஒரு பார்வையில் பார்த்தோம் என்றால், சகல கேள்விகளுக்கும் விடை இருக்கும்.




நிம்ரோத்

☞ யார் இந்த நிம்ரோத்?

அவரை நிழலும் பொருளும் என்று பாடங்கள் பார்த்ததில்லை.

☞ அவரை பற்றி தீர்க்கதரிசனம் இருக்கா?

**இல்லை.**

☞ நிம்ரோத் வாழ்க்கை நமக்கு எந்த ஒரு வகையிலாவது, ஆவிக்குரிய விதத்தில், பிரயோஜனம் இருக்கா?

**இல்லை**.

அவரை பற்றிய வசனப்பகுதி, கொடுக்கப்பட்டிருக்கிற தகவல்கள் எந்த விதத்திலேயும் நாம பயன்படுத்துறது இல்லை.

☞ ஏன் தேவன் இந்த விஷயங்களை வேதத்தில் பதிவு செய்ய வேண்டும்?

நிம்ரோத் கர்த்தருக்கு முன்பாக பராக்கிரமசாலி, பட்டணங்களை கட்டினார். Including **நினிவே**. அசூர் புறப்பட்டு, அது வேற யாரும் கிடையாது அவர் கூட **நிம்ரோத்** தான். நினிவே பட்டணம் யோனா புத்தகத்துல பார்க்கிறோம். அதுவும் கூட நிம்ரோத் தான் கட்டிருக்கிறார்.

➔ ஏன் இந்த ஒரு நிம்ரோத் பற்றி பைபிள்ல இவ்ளோ Information Special-ஆக கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்?

ஆனாலும் நாம இந்த Information ஐ எதுக்குமே பயன்படுத்தறது இல்லை. வம்ச வரலாறு வாசிக்கும் போது, நோவாக்கு அடுத்து, சேம், காம், யாப்பேத்.

➔ காமுடைய பையன் கூஷ். கூஷ் பெற்றெடுத்தார் நிம்ரோத்

ஆனா எதுக்கு கொடுக்கப்பட்டிருக்கு? நாம யோசிக்கறது இல்லை. ஆனால், தேவன் இதை பைபிளில் வைச்சிருக்கிறார். அவனை பற்றி சில விஷயங்கள் வேதம் சொல்கிறது. அதிகமா தகவல் இல்லை. அவன் எப்படி இருந்திருக்கிறான்? என்றால் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரன்.

☞ இந்த ஒரு சூழல் அவனுக்கு எப்படி உருவாகிருக்கும்?

☞ பேழையிலிருந்து மனுஷர்கள் நான்கு ஜோடி ஆனால் மிருகங்கள் நிறைய ஜோடி வந்திருக்கும். இப்ப உலகம் பெருகும் போது Automatic-ஆக மனுஷர்களை விட மிருகங்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்கும். எதார்த்தமாக இந்த மிருகங்கள் மூலமாக மனுஷ ஜாதிக்கு ஆபத்து வந்திருக்கும். அப்போ இந்த மனுஷர்களை அப்பப்போ விலங்குகள் பயமுறுத்தும்போது, அப்பதான் பலத்த வேட்டைக்காரராக அவைகளிடமிருந்து மக்களை இரட்சிக்கிறவராக நிம்ரோத் இருந்துருக்கார்.

☞ ஆகவே அந்த பராக்கிரமம் அவருக்குள் இருந்துருக்கிறது. இந்த வகையில அவர் ரொம்ப பிரபலமாகியிருக்கிறார். இரண்டாம் உலகத்தின் துவக்கத்தில், ஜனங்கள் மேல எதாவது, சிங்கம், புலி, சிறுத்தை, பாம்பு மலைப்பாம்பு எதுவா இருந்தாலும் அங்க ஒரு Instant Help-க்கு நிம்ரோத் இருப்பார். அவர் அப்படியே காப்பாத்துவார். ஜனங்கள் அவரை பார்த்து ரொம்ப ஆச்சர்யப்பட்டாங்க. பாருங்க, ஒரு தனி மனுஷன் இந்த அளவுக்கு பிரபலியம் ஆகுறார் என்றால் அவருடைய Influence, ஆதிக்கம் ஜனங்கள் மத்தியில், அதிகமாக இருந்திருக்கும். அந்த ஆதிக்கம் எந்த வகையில் இருக்கலாம் என்றால் நன்மை அல்லது தீமை இந்த இரண்டு வகையில் எதாவது ஒன்றாக இருக்கலாம். ஆனால் நிம்ரோத்

எப்படிப்பட்ட ஆதிக்கம் செலுத்திட்டார்? தெரியாது. நம்ம கொஞ்சம் Guess பண்ணலாம். பூமில நிம்ரோத் எப்படிப்பட்ட மனுஷனா இருந்துருக்கலாம்.

அவங்களுடைய தாத்தா History கொஞ்சம் பார்க்கலாம். அவருடைய தாத்தா காம். காம் பற்றி நமக்கு தெரியும். அவர் பற்றி பைபிளில் நல்ல Record இல்லை. அப்பா கிட்டயே கெட்ட பேர், சாபம் வாங்கினார்.

☞ அந்த ஜீன்ல தான் நிம்ரோத் வர்றார்.

கண்டிப்பா இரண்டாம் உலகத்தில், இவர் தீமையான விஷயங்களுக்கு, பிரபலம் ஆகியிருக்கார். அதே சமயம் பாருங்கள், சேம் தேவன் கிட்ட நல்ல வார்த்தைகள், நல்ல ஆசீர்வாதம் வாங்கிருக்கார். இரண்டு விதமான ஜனங்கள் இரண்டாம் உலகத்தில் அந்த சமயத்தில் உருவாகியிருக்காங்க ஜனங்கள் மத்தியில் ஒரு பிரிவு உண்டாகியிருக்கிறது. சேம் தேவன்கிட்ட அவங்க அப்பா கிட்ட நல்ல சாட்சி வாங்கினவர். அவருக்கு பின் அவரைப் போல ஜனங்கள் ஒரு விதமான Clue.

☞ நிம்ரோத் முற்றிலும் வேறுபட்ட சுபாவத்தில் அவருக்கு பின் அவரைப் போன்ற ஜனங்கள். இந்த மாதிரி ஒரு பிரிவு இரண்டாம் உலகத்தின் துவக்கத்தில் உருவாகியிருக்கிறது. அது மாத்திரம் இல்லை அந்த பழமொழி Actual-லா இதை எழுதும் போது இது மோசே தான் எழுதிட்டார்.

☞ மோசே எழுதும் போது நிம்ரோத் மரிச்சி போய் பல வருஷங்கள் ஆகியிருக்கும். ரொம்ப காலத்துக்கு பின் மோசே எழுதுறார். ஆனால் மோசே காலத்துல பழமொழி இருந்துருக்கிறது 'நிம்ரோத், கர்த்தருக்கு முன்பாக பெரிய வேட்டைக்காரன்' என்று பழமொழி சொல்லிருக்காங்க. அந்த அளவுக்கு அவர் பிரபலமாகிருக்கார்.

☞ மோசே இதை Record பண்ணிருக்கார்.

ஒரு வகையில் பார்க்கும் போது தேவன் கிட்ட இருந்து ஜனங்களை பிரிக்கிற விதமா தான், இவருடைய Role இருந்துருக்கிறது. ஜனங்கள் **<u>எல்லா ஆபத்துக்களுக்கும், எல்லா தேவைகளுக்கும் தேவன் என்று பார்க்கிற சூழல் மாறி நிம்ரோத்</u>** வந்திருக்கிறார். அவர் தான் உடனுக்குடன் உதவி செய்றார், ஜனங்களுக்கு கிட்டதட்ட ஒரு **இரட்சகர்** மாதிரி, விலங்குகள் கிட்ட இருந்து, காப்பாற்றுகிற இரட்சகர் மாதிரி இருந்திட்டார். கர்த்தருக்கு முன்பாக பராக்கிரமசாலி நன்மைக்கு இல்லை, நன்மைக்கு அல்லாத **தீமையான விஷயங்களுக்கு** பலத்த வேட்டைக்காரனாக இருந்தார்.

☞ தேவனிடத்தில் இருந்த பயபக்தியை குறைக்கும் விதமாக, இவருடைய ஸ்தானம் இருந்திருக்கனும் என்று பார்க்கிறோம். இவ்ளோ தான் பைபிளில் Reference இருக்கு. நிம்ரோத் பற்றி, வசனங்கள்ல இருந்து இந்த தகவல்கள் தான் எடுக்க முடியும். அவர்

இரண்டாம் உலகத்துல பராக்கிரமசாலி கர்த்தருக்கு முன்பாக **பலத்த வேட்டைக்காரன்**, ஜனங்களுக்கு கிட்டதட்ட ஒரு **இரட்சகர்** ஆகிட்டார். அவர் உண்டுபண்ணினது தான், முதல் பட்டணம் பாபேல். தேவன் சொல்றாங்க, எல்லா குழப்பங்களும், விக்கிரகங்கள் அருவெறுப்புகளும், ஜனங்களுக்கு பரவினது அதுக்கு காரணம், அந்த **பாபேல்**. அந்த பேரை தூக்கி தேவன் போப் மார்க்கத்துக்கு வைத்தது சரியாக பொருந்தும். இது தான் வசனத்தில் இருந்து பார்க்கிறோம்.

இப்ப கொஞ்சம் இந்த வசனங்களின் காரியங்களுக்கு, உலகத்தில் என்ன காரியங்கள் நடந்திருக்கும் என்று பார்த்தால், ரொம்ப அருமையாக சில உண்மைகள் வெளிப்படுகிறது. அந்த பாபேல், பாபிலோன் அவங்களுடைய **சரித்திர புஸ்தகங்க**ள் எடுத்து படித்தால் அதில் ஒரு **பிரபலமான ராஜா** இருந்திருக்கிறார். அவருடைய பேர் **நினஸ்**.

ஆதியாகமம்-10:11

“அந்தத் தேசத்திலிருந்து **அசூர்** புறப்பட்டுப்போய், **நினிவே**யையும், ரெகொபோத் பட்டணத்தையும், காலாகையும்,”



நினிவே பட்டணம்

அசூர் புறப்பட்டு போய் நினிவேயை கட்டினார். இந்த நினிவே பட்டணத்தின் அர்த்தம் **‘நினஸின் வாசஸ்தலம்’**. நினஸின் வாசஸ்தலம் தான் நினிவே. பாருங்க! நினிவேயை கட்டினது நிம்ரோத் இது வசனத்தில் இருக்கிறது. ஆனால் நினிவேக்கு அர்த்தம் நினஸின் வாசஸ்தலம். பாபிலோன், அதுக்கு பக்கத்தில் இந்த நினிவே. பாபிலோனின் சரித்திர புஸ்தகத்தில் பிரபலமான ராஜா **“நினஸ்”**. இதில் ஒரு தொடர்பு கிடைக்கும். நினிவே கட்டினது நிம்ரோத். ஆனால் நினிவே அர்த்தம் நினஸின் வாசஸ்தலம்.

☞நினஸ் வேற யாரும் இல்லை நிம்ரோத். நினிவேயை யார் கட்டினா? நிம்ரோத். நிம்ரோத்தை சரித்திர புஸ்தகத்தில் ராஜா என்று சொல்வது புரியும். மற்ற வரலாற்று

ஆசிரியர்கள் தெளிவா சொல்றாங்க. நிம்ரோத் தான் நினஸ் - நினஸ் தான் நிம்ரோத். இதில் எந்த சந்தேகமும் இல்லை. இப்ப பாபிலோன்குள்ள நினஸ் அப்படின்னு ஒரு ராஜா. அவர் வேற யாரும் இல்லை நிம்ரோத் தான். எந்த நிம்ரோத்? வேதத்துல இருக்கிற நிம்ரோத்.

☞இந்த நினஸ்-க்கு ஒரு மனைவி. அவங்க பேர் **"செமிராமிஸ்"**.



**செமிராமிஸ்**

ஹிஸ்டாரியன் **"இகுப்பியஸ்"** Clear-ஆக சொல்றார், இந்த நினஸும் செமிராமிஸும் **ராஜா, ராணி** போல இருந்துருக்கிறார்கள். நிம்ரோத் ஆபிரகாம் வாழ்ந்திட்ட காலத்தில் இருந்திருக்கார். ஒரு சிலர் சொல்றாங்க ஆபிரகாமுக்கு கொஞ்சம் முன்னால இருந்துருக்காங்க.



பரவால்ல எதுவா இருந்தாலும் அந்த காலம் ஓரளவுக்கு புரியுது. நினஸும் செமிராமிஸும் ராஜா ராணி போல இரண்டாம் உலகத்து துவக்க காலத்துல இருந்துருக்காங்க.

இது சரித்திர புஸ்தகத்தில் இருந்து நமக்கு தெரியுது.
☞அந்த படத்தில் நினஸும் செமிராமிஸும் வேட்டையாடுகிறது போல, அந்த படங்கள் சில தொல்பொருள் ஆராய்சில கிடைத்திருக்கிறது. **நினஸ் செமிராமிஸும் வேட்டையாடுறா மாதிரி** தோரணையில் இருக்கற மாதிரி படங்கள் தெளிவாக நாம் புரிந்து கொள்ளலாம். நிம்ரோத் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரன்.

# செமிராமிஸ்



அவர் கட்டினது தான் நினிவே அந்த நினிவேக்கு அர்த்தம் நினஸின் வாசஸ்தலம் அப்ப நினஸ் வேற யாரும் இல்ல நிம்ரோத் தான். இது பாபிலோனுடைய ஹிஸ்ட்ரி. பைபிளில் பார்த்தால் போப் மார்க்கத்தை தேவன் "ரகசியம்", "மகா பாபிலோன்" என்று சொல்றாங்க. பாபிலோன் கூட சேர்ந்திருக்கிற வார்த்தை ரகசியம். நிறைய ரகசியமான விஷயங்கள் உள்ள புதைந்திருக்கிற இடம் தான் பாபிலோன். அது போப் மார்க்கத்துக்கு கர்த்தர் சொல்லிருக்கார்.

☞ பயங்கரமான அருவெறுப்புகள், ரகசியமான விஷயங்கள் இந்த போப் மார்க்கத்தில் இருக்கிறது. அதினால் இந்த வார்த்தை பயன்படுத்திருக்கார். அப்ப கண்டிப்பா, தேவனை விட்டு இந்த உலகத்தை வழிநடத்திட்டு போன அநேக ரகசியமான காரியங்கள், அந்த பழைய பாபிலோனில் இருந்துருக்கிறது.

உண்மை தான்.

இவ்ளோ! அந்நிய ஜனங்களுடைய தேவர்கள் ஆராதனை, அவங்க கடவுள்கள், இவங்க பற்றின ரகசியமெல்லாம் என்ன?

☞ இந்த ரகசியம் எப்படி உருவாகிடுச்சி?

எல்லாமே பாபிலோன் தான். அந்த ரகசியத்துக்கு எல்லாம் காரணம் **செமிராமிஸ்** தான். இந்த **செமிராமிஸ் நினஸுடைய மனைவி.** இவங்க தான் காரணம் இவங்களுக்கு நல்லா தெரியும். அவர் கணவர் நிம்ரோத் அவ்ளோ நல்ல ஆள் இல்லை. இவங்க கூட நல்ல ஆள் இல்லை. இந்த நிம்ரோத் மனம் போன போக்குல வாழ்ந்தார். பாவங்கள் செய்வதின் மூலம் பெற்றுக் கொள்ளும் இன்பங்கள் நல்லது. அவர் வேட்டைக்கு போகும் போதே ஒரு பெரிய Music teem, Dance teem எல்லாத்தையும் கூட்டிட்டு, போறதாக சரித்திரம் சொல்கிறது.

இதை செமிராமிஸ் ஆதரித்திருக்காங்க. இப்படி தான் அவங்களுடைய வாழ்க்கை இரண்டாம் உலகத்தின் துவக்கத்துல இருந்ததாக சரித்திரங்களில் பார்க்கிறோம்.

☞ இந்த நிம்ரோத் **சீக்கிரத்திலே மரிச்சிட்டார்.** நிம்ரோத் மரணத்துக்கு பின்பு தான் சகல அந்நிய மதங்கள் பற்றிய ரகசியம், உண்டானதாக பார்க்கிறோம். ஆனா அவர் எப்படி மரிச்சிட்டார் தெரியலை. ஒரே ஒரு விஷயம் என்ன தெரியுது அவர் மரணம் சாதாரண மரணம் இல்லை. ரொம்ப **கொடூரமான மரணம்** மரிச்சிருக்கார். கண்டுபிடிக்கனும். ஆனா நிம்ரோத் மரிச்சதுக்கு பின்பு அவங்க மனைவி "செமிராமிஸ்" சில ரகசியமான அமைப்புகள் போன்ற விஷயங்கள் உருவாக்கிருக்காங்க சில சம்பிரதாயங்கள் சில பழக்கவழக்கங்கள் சில நம்பிக்கைகள் இதெல்லாம் ரொம்ப ரகசியம். இந்த ரகசியங்களுக்குள்ள யாராவது நுழையனும்னு விரும்பினால் எந்த தேசமா இருந்தாலும் சரி, பாபிலோன் வரனும் செமிராமிஸ் பார்க்கனும். செமிராமிஸ், அவங்க அந்த ரகசியமான விஷயங்களுக்குள்ள போகறதுக்கு முன்னால அவங்களுக்கு சில **ரொம்ப விநோதமான, போதையூட்டக் கூடிய சில பானங்கள்**, அவங்களுக்கு கொடுக்கறாங்க.

அவங்க போதனைகள், அமைப்புகள், பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் இதுக்குள்ள யாராவது பிரவேசிக்கனும்னா அவங்களுக்கு இந்த போதையூட்டக்கூடிய ஒரு பானம் கொடுக்கப்படிருக்கிறது.அது தான் பழைய ஏற்பாட்டில் பாபிலோன் பற்றி பேசும் போது, இவர்கள் சகல ஜாதிகளையும் வெறிக்கொள்ள செய்திருக்காங்க.

☞ இந்த பாபிலோனில் இருந்து தான் எல்லா ரகசியங்கள், அந்நிய தேவர்கள் வணக்கம் இந்த விஷயங்கள் ஒட்டு மொத்த மனுக்குலத்துக்கும் பரவி இருக்கிறது.

எந்த தேசத்துல இருந்து யார் வந்திட்டாலும் அவங்களுக்கு மது கொடுத்து வெறிக்க செய்து அடுத்து எல்லா பாவ பழக்கவழக்கங்களிலும் அவங்களை பழக்கி, அது அப்படியே இன்னிக்கு உலகம் முழுக்க பரவி இருக்கிறது.

☞ அது தான் எரேமியா, எசேக்கியேல் தீர்க்கதரிசிகள் எல்லாம் பேசும் போது பாபிலோன் அது பொற்பாத்திரம். ஆனால் சகல ஜாதிகளையும் வெறிக்க செய்திருக்காங்க. இந்த வசனங்களை Spiritual-லா போப் மார்க்கத்துக்கு பார்க்கிறோம். ஆனா அதுக்கு முன்னால Literal Application அந்த பாபிலோனுக்கும் இன்னிக்கு இருக்கிற பாபிலோன் போப் மார்க்கத்திற்கும் பார்க்கலாம்.


☞ பழைய பாபிலோன் கிட்ட ஒரு விஷயம் இருக்குன்னா கண்டிப்பா அது இன்னிக்கு இருக்கிற பாபிலோன் கிட்ட இருந்துருக்கனும். Literal பாபிலோன் ஒரு வணக்கம் அங்க செய்றாங்க, **"அம்மா, மகன்"** (தாய் மற்றும் அவங்க பிள்ளையை) வணக்கம். இது இன்னிக்கு போப் மார்க்கத்துக்கிட்ட இருக்குது.




இது **"மடோனா"- தாய் பிள்ளை** அவங்க மகன், இதை கிறிஸ்தவர்கள் மரியாள் **"குழந்தை"** இயேசு ஏற்றுக் கொண்டிருக்காங்க. "மடோனா" -**மரியாள்** கிடையாது. அந்த "குழந்தை" - **இயேசு** கிடையாது. அதை அப்படியே திருப்பி விட்டிருக்காங்க. இந்த விஷயம், நிம்ரோத், செமிராமிஸ் காலத்திலேயே இருந்திருக்குது.

**"செமிராமிஸ் நிம்ரோதினுடைய மனைவி. ஆனா உண்மையிலே செமிராமிஸ்க்கு நிம்ரோத் பையனும் கூட"** ரொம்ப விநோதமான உறவு.

செமிராமிஸ்க்கு நிம்ரோத் பையனும் பின்பு கணவனாகவும் இருந்திருக்காங்க. அப்ப செமிராமிஸ் தாய் ஸ்தானம். பையன் ஸ்தானம் நிம்ரோத். இந்த வணக்கம் பாபிலோனில் இருந்திருக்கிறது. அது இன்னிக்கு வரைக்கும் இந்த பாபிலோன்லயும் இருக்குது. இது ரொம்ப Reference கொடுக்குது. உலகம் முழுக்க இருக்கிற ஜாதிகள், ஜனங்கள், அவங்க முறை பார்த்தால், இந்த தாய், சேய் வணக்கம் பார்க்கலாம்.







☞ உதாரணத்துக்கு **கிரேக்க புராணம்** எடுத்திட்டா தாய்க்கு பேர் **செரிஸ்**, மகனுக்கு பேர் இல்லை. மகன் இருக்குது, தன் மகனை தன் நெஞ்சி பக்கத்துல, செரிஸ் வைத்திருக்கும், இது கிரேக்க புராணம். தாய் மகன் வணக்கம் அங்க இருக்குது.

☞ அதே போல் வேற இடத்தில் ஐரின், புளுட்டடஸ். **ஐரின்** தாய், **புளுட்டடஸ்** மகன். இதுவும் கிரேக்க புராணத்தில் **இன்னொரு** கடவுள்.

☞ **ரோம் தேசத்தில்** தாய் பேர் **“பார்ச்சுனா”**, மகன் பேர் **“ஜூபிட்டர்”**.

☞ **ஆசியா கண்டத்தில்** பார்க்கும் போது, தாய் பேர் **“சிபிலி”**, மகன் பேர் **“டியோய்ஸ்"**.

☞ **இந்தியால** தாய் **ஈஷி**, மகன் **ஈஸ்வர்**. தாய் மகன் வணக்கம் பாபிலோனில் ஆரம்பித்தது,

☞ **செமிராமிஸ், நிம்ரோத்** - தாய், மகன் வணக்கம், அப்படியே எல்லா இடத்திலேயும் பார்க்க முடிகிறது. அப்படியே இன்னிக்கு பேப்பல் ரோம்ல இருக்கு, போப் மார்க்கத்தில் இருக்கு, குழந்தையோட மடோனா, அந்த **மடோனாவை- மரியாளாகவும், குழந்தையை- குழந்தை இயேசுவாகவும்** பார்க்கிறோம்.




Isis and Horus

Mary and Jesus

Yashoda and Krishna

| | | |
|---|---|---|
| சிபிலி (ஆசியா) | **ஐரின் & புளுட்டஸ்** | எகிப்து கடவுள ரோமன் கத்தோலிக இந்து கடவுள |


Semiramis y su hijo Tammuz
Enciclopedia de religiones
Vol. 2, p. 398


Isi con su hijo Iswara
Madre babilónica de la India
Dos Babilonias, p. 20


Isis con su hijo Horus
Madre babilónica de Egipto
Dos Babilonias, p. 20


María con el "Niñito Jesús"
**Virgen de Monte Carmelo**
Nótese el amuleto supersticioso

➔ **இது எல்லாமே பாபிலோனில் ஆரம்பித்து இருக்கிறது**.

முதல்ல ஜனங்கள் மெய் தேவனை விட்டுட்டு இவ்ளோ அந்நிய தேவர்களை வணங்கிட்டு இருக்காங்க.

☞ எப்படி?

ஆனால் பைபிளில் பார்க்கும் போது இரண்டாம் உலகம் புதிய துவக்கம், ஒரு பராக்கிரமசாலி நிம்ரோத், அவன் உருவாக்கின பட்டணம் பாபிலோன். இந்த நிம்ரோத் பற்றி அந்த பாபிலோனில் பார்த்தால், நினஸ், நினஸ் மனைவி செமிராமிஸ், அவங்களே அவருக்கு தாயாகவும் இருந்தது நாம பார்க்கிறோம்.

➔ பாபிலோன் பக்கத்தில் ஒரு முக்கியமான ராஜ்யம் **எகிப்து**. இவங்க விநோதமான விஷயங்களுக்கு பேர் போன ராஜ்யம். எகிப்துக்குள் இருக்கிற பழக்க வழக்கங்கள், விஷயங்கள் புரிந்துக் கொள்ளவே முடியாது. மந்திரமா, தந்திரமா இல்லை என்னன்னமோ விநோதமான விஷயங்கள் எகிப்தில் இன்னிக்கு வரைக்குமே இருக்குது.



**ஓசரிஸ்**

எகிப்து அங்க கூட ஒரு கடவுள் இருந்திருக்கார் அவங்களுக்கு அம்மா இருக்காங்க. அந்த கடவுள் பேர் **ஓசரிஸ்**, அம்மா பேர் **ஈஸிஸ்**, கொஞ்சம் யோசித்து பார்த்தால், இந்த ஓசரிஸுக்கு ஒரு பெக்கூலியர் பட்டம் இருக்குது ஒரு விநோதமான பேர் இருக்குது.

➔ <u>"He is the Husband of the Mother"</u>

இவர் தன் தாயினுடைய கணவர் என்கிற பட்டம் அவருக்கு இருக்குது. இதை பார்க்கும் போது தெள்ளத் தெளிவா இருக்குது இந்த **<u>ஓசரிஸ் வேற யாரும் இல்லை நிம்ரோத் தான்</u>**. அப்ப ஓசரிஸ் வேற யாரும் இல்லை, **நினஸ்**. அந்த நினஸ் வேற யாரும் இல்லை நிம்ரோத் தான் பார்க்கிறோம். இது எகிப்தில் நிறைய விஷயங்களில் நிரூபிக்கலாம். நாம சின்ன விஷயத்தை எடுத்து ஆரம்பத்துல காண்பிக்கிறோம்.

➔ இந்த ஓசரிஸை எகிப்தில் எப்படி வணங்குறாங்கன்னா

அவருக்கு ஒரு Costume இருக்குது. ஒரு சிறுத்தையினுடைய தோல் இது வந்து ஒரு முக்கியமான Costume. அந்த ஓசரிஸை வணங்குற ஜனங்கள்,ஆசாரியர்கள். அந்த மாதிரி சிறுத்தையினுடைய தோல் ஆடை அணிந்து தான் ஆராதிக்க வேண்டும். சிறுத்தையினுடைய தோலை உடுத்திக்கொண்டு இருக்கறது, ரொம்ப ஆச்சர்யம். நிம்ரோத் என்றால் அர்த்தம் சிறுத்தையை ஆண்டுகொண்டவன்.

☞ இந்த ஆராய்ச்சி செய்திட்ட சகோதரர் அடுத்ததா இந்தியாவை கைக்காண்பிக்கிறார். இன்னிக்கு கூட ஒரு வகை சிறுத்தை சிட்டா வேட்டையாடுறதுக்கு பயன்படுத்துறாங்க. நிம்ரோத் அவர் காலத்திலேயே சிறுத்தையை வேட்டையாடுறதுக்கு பயன்படுத்திருக்கார். அந்த சிறுத்தையை ஆண்டுகொண்டதுனால அவருடைய டிரஸிங் கூட ஒரு சிறுத்தையின் தோல் உடுத்தியிருக்கிறது பார்க்கிறோம். சிறுத்தையை கீழ்ப்படுத்தி அதன் துணை கொண்டு வேட்டையாடினதால், அதை நினைவுப்படுத்துவது போல அவர் அந்த சிறுத்தை தோல் உடுத்தியிருந்தார்.

இதெல்லாம் எகிப்தில் ஓசரிஸ் கடவுளுடைய விஷயம். இது ரொம்ப Clear இது பைபிளில் இருக்கிற நிம்ரோத்தை காண்பிக்கிறது. அடுத்து ஓசரிஸ் பற்றி சரித்திரம் பார்க்கும் போது ஓசரிஸ் **கலர் கருப்பா** இருந்திருக்கார். இதில் ஆச்சர்யமே இல்லை, நிம்ரோத் காமுடைய பேரன். கூஷ் - மகன். இவங்க தான் பூமில தோன்றிட்ட முதல் நீக்ரோ ஜனங்கள் **கருப்பர் இன மக்கள்**. இந்தியாவுல சில ஜனங்கள் வணங்குறாங்க. **கருப்பு, சிறுத்தை தோல், வேட்டைக்காரர் துணி**, அந்த பேர் எல்லாம் ஞாபகத்துக்கு வரும். எல்லாம் ஆரம்பம் நிம்ரோத். கர்த்தருக்கு முன்பு பராக்கிரமசாலி, பெரிய வேட்டைக்காரன். அந்த கருப்பு கூட ஒரு அருமையான ப்ரூப் ஓசரிஸ்-க்கு குடுக்கிற அந்த கருப்பு கலர் அவர் நிம்ரோதையே குறிக்கிறாங்க என்று பார்க்கிறோம்.

☞ மற்ற மதங்கள் உருவாகிறதுக்கு மிக முக்கியமான காரணம் நிம்ரோதினுடைய மரணம். இந்த நிம்ரோதின் மரணத்திற்கு பின்பு தான் எல்லா ஜனங்களிடம் அந்நிய தேவர்களும் அதனுடைய வணக்கங்களுமே உருவாகிடுச்சி இந்த நிம்ரோதின் மரணம், மற்ற மதங்கள் உருவாகுறதுக்கு அஸ்திபாரம்.

எப்படி நிம்ரோத் மரிச்சிட்டார்?

தெரியாது.

ஆனா **ஓசரிஸ்** எப்படி மரிச்சிட்டார்னு Record இருக்கு. நமக்கு நல்லா தெரியும் **ஓசரிஸ் தான் நிம்ரோத்**. ஓசரிஸ் எகிப்தில் இருந்திருக்கார். இந்த எகிப்தியருக்கு ஒரு பழக்கம் இருக்கு செத்து போய்ட்டா **மம்மி** பண்ணுவாங்க. ஒரு Book-ல எழுதி வைப்பாங்க. அந்த Book-க்கு பேர் **<u>The Book of the Dead</u>**. மரிச்சி போனவங்களுடைய புஸ்தகம்.


அதில் அவர் பற்றிய Detail இருக்கும்.


☞ மரிச்சி போனவர் யார்?

☞ எப்படி மரிச்சி போனாங்க?

அந்த **புக்ல** இந்த ஓசரிஸ் மரிச்சி போன சம்பவம் பற்றி ரொம்ப அருமையா சொல்லிருக்காங்க. "ஒரு சமயம் எகிப்தில் ஓசரிஸ் இல்லை, எங்கயோ வெளில போயிருக்கார், அப்போ ஓசரிஸுடைய எதிரி ஒருத்தர் எகிப்துக்கு வந்திருக்கார். அந்த எதிரியினுடைய பேர் **செம்**. இந்த செம் வந்து ஓசரிஸ்-க்கு கீழ் முக்கியமான பதவியில் இருந்த, **72 தலைவர்களை** கூப்பிட்டு இந்த ஓசரிஸ் செய்த எல்லா தப்பு, அநியாயங்கள் எல்லாம் விளக்கி காண்பித்து, இப்படிப்பட்ட மனுஷன், உயிரோடு இருக்கக் கூடாது என்று, அவர் உயிரோடு இருக்க, நீங்க அனுமதிக்க கூடாது. அவரை அழிக்கனும் சொல்லும் பொழுது, இந்த செம் சொன்ன விஷயங்கள், அவங்களுக்கு நியாயமா இருந்து, 72 **தலைவர்களும்** ஏற்றுக்கொண்டு ஓசரிஸ் மறுபடியும் எகிப்துக்கு வந்ததும் அவரை வெட்டி கொலை செய்திருக்காங்க.

☞ **கொலை செய்தது மாத்திரம் இல்லை அவருடைய சரீரத்தை 14 துண்டாக்கி அதை எகிப்து முழுக்க பரவ செய்திட்டாங்க.**

இந்த ஓசரிஸ் மாதிரி யாராவது கிரியை செய்தால், அவங்களுக்கும் இதே **கதி** தான் என்று, ஒரு எச்சரிப்போடு, எகிப்து முழுக்க போய்டுச்சி. இது தெரிந்தவுடனே தாய் மற்றும் **"மனைவி ஈஸிஸ் ரொம்ப அழுதிட்டு எங்கெல்லாம் ஓசரிஸ் சரீர துண்டுகள் இருந்துச்சோ அதெல்லாம் கண்டுபிடிச்சி அங்கெல்லாம் ஒரு கோயில் உண்டுபண்ணினதாக"** பார்க்கிறோம்.

☞ ஆனால் இந்த **செம்** யார்?

ஓசரிஸ் விரோதி பைபிளில் வர்றாங்க **சேம்**, செம், இரண்டுக்கும் ஒரே அர்த்தம் <u>The Appointed one</u> நியமிக்கப்பட்டவர்.

☞ செம், நிம்ரோத் மரணத்துக்கு காரணமானவர்.

எகிப்தில் இருக்கிற நல்ல ஜனங்களுடைய நம்பிக்கை செம் தான் நியமிக்கப்பட்டவர். அவர் உண்மையான கடவுளின் சக்தியினால் இந்த ஓசரிஸ் தலைவர்களையே கீழ்ப்படிய வைத்து அவங்க மூலமாக அவரை கொலைப் பண்ணிட்டார். இவர் தன்னுடைய வார்த்தைகளினால் எல்லாத்தையும் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, நிம்ரோத் என்ற

தீமையான அரசனை கொலைப் பண்ணிட்டார். இந்த செம், சேம் என்று சரித்திரத்தில் வருவதை பார்க்கிறோம். ஓசரிஸ், நிம்ரோத் ஆட்கள் கதையை வேறு மாதிரி திருப்பி விட்டு, இன்னிக்கு அந்த கதை கூட உலகம் முழுக்க, ரொம்ப ஆச்சர்யமா இருக்குது.

➔ இந்த ஓசரிஸ் அடியார்கள் சீஷர்கள் நம்ம கடவுள் நிம்ரோத், அதோனிஸ் தி மைட்டி ஒன். செம் ஒரு தீமையான ஒருத்தர்-செம் தி ஈவில் ஒன்.

☞ இந்த **அதோனிஸ்** என்பவருக்கு இன்னொரு பேர்தான், **தம்முஸ்**. அதோனிஸ் - ஓசரிஸ் ஓசரீஸ் தான் நினஸ். நினஸ் தான் நிம்ரோத். அவர் தான் தம்முஸ். அந்த ஸ்திரிகள் தம்முஸ்-க்காக அழுதிட்டு இருக்காங்க. எகிப்துல ஓசரீஸ்க்கு இன்னொரு பேர், தம்முஸ். இந்த அதோனிஸை இந்த செம் கொலை செய்திட்டார். அதை எப்படி சித்தரிச்சிருக்காங்க என்றால் எகிப்தில் தீமைக்கு அடையாளம் **பன்றி**. இந்த சேம் தன் வாயின் வார்த்தைகள் மூலம் வல்லமையினால், அந்த **72 தலைவர்களை**, தன் வசப்படுத்தி நிம்ரோத்தை கொலை செய்ததால் நிம்ரோத் ஆட்களை பொருத்தவரைக்கும், சேம் தீமையானவர். காட்டு பன்றிக்கு பல் இருக்கும், **பன்றி அவர் வாயின் வல்லமை பல்லுனால எங்க கடவுளை கொலைப்பண்ணிட்டார்**, என்று சொல்லி, **சேமுக்கு அடையாளமாக காட்டு பன்றி** வைத்திருக்காங்க.

☞ அது இன்னிக்கு இந்தியால கூட ஒரு கடவுள். இந்த நம்பிக்கையினால எத்தனையோ இடங்கள்ல தீமையை வெட்டி கொல்றமாதிரி **பன்றியை, பலி** கொடுக்கிறாங்க. அந்த பன்றிய பலி கொடுக்கிறது எல்லாமே **சேம்மை அடையாளமாக நிந்திக்கிற** ஒரு விஷயம். சேம் தேவனால அங்கிகரிக்கப்பட்டவர். நன்மை பக்கம் நின்றவர். ஆனால் இந்த சாத்தானுடைய தந்திரங்கள் அப்படியே மாற்றி அமைத்திட்டு. ஆனால் சேம் மூலம் கொல்லப்பட்ட நிம்ரோத்தை, எல்லாருமே கடவுளா வணங்குறாங்க. இப்ப பார்த்த இடங்களில் எல்லாம் கடவுள், நிம்ரோத். இந்த நிம்ரோத்துக்கு தீமை செய்ததுக்காக, பன்றியை வெட்டுறாங்க.

☞ தேவனால அங்கிகரிக்கப்பட்ட சேம், நீதிமானா இருந்திட்ட சேம், நிம்ரோத்தை கொன்ன **சேமுக்கு பன்றியை அடையாளமா** வைத்திருக்காங்க. இந்த ஜனங்களால உலக முழுக்க தவறாக காண்பிக்கப்பட்டிருக்கார். விக்கிரகத்துக்கு எல்லாம், ஆரம்பமாகிட்ட நிம்ரோத், மெய்யான கடவுள் போல இருக்கார். இது சாத்தானுடைய தந்திரம், அவர் தான் நன்மையை தீமை என்றும், உண்மையை பொய் என்றும், காண்பிக்கிறான். ஆனால், ஏற்ற சமயத்தில், இந்த விஷயங்கள் மாற்றிப் போடப்படும். கண்டிப்பா, தேவனுடைய பிள்ளைகள், நாம நம்பலாம்.

☞ இந்த ஓசரிஸ் மரணத்துக்கு பின் ஈஸிஸ் அதாவது செமிராமிஸ், ரொம்ப கஷ்டமாகிட்டாங்க. ராஜா, ராணி போல் இருந்தாங்க. நிம்ரோத் மரிச்சிட்டாங்க இவங்களுக்கு

**எல்லா மதிப்பும் போய்ட்டு**. அந்த பெண் பற்றி, பேசும் போது, சரித்திரத்தில், சாதாரண **பெண்மணி இல்லை**. பயங்கர Ambition, **பேராசை, துற்குணம் நிறைந்த பெண்**.

☞ அவங்க அருமையா ஒரு திட்டம் தீட்டி, நிம்ரோத் செத்து போய்ட்டார்.

☞ அவர் என் மகன், யார் தெரியுங்களா?

அவர் தான் வாக்கு தத்தம் பண்ணிட்ட Seed of the Women "ஸ்திரியின் வித்து". உங்களுக்கு வந்த எல்லா தீமைகளிலிருந்தும் தன் கால்னால நசுக்கின **அந்த ஸ்திரியின் வித்து நிம்ரோத்**. அப்படி நசுக்கும் போது, அங்க சொல்லப்பட்டிருக்குது, அந்த சர்ப்பம் அவருடைய குதிங்காலை கடிக்கும், அதுனால தான் அவர் மரிச்சிட்டார். **சொல்லப்பட்ட** ☞ **ஸ்திரியின் வித்து தான் இந்த நிம்ரோத்**.

☞ எப்படி இது அவங்களுக்கு தெரியும்?

ரொம்ப Simple நம்முடைய முற்பிதாக்கள் இரண்டாம் உலகத்துல அவங்க பிரவேசிக்கும் போது, அவங்களுக்கு ஏதேனுடைய சம்பவங்களும், ஏதேனில் தேவன் சர்ப்பத்துக்கிட்ட கொடுத்திட்ட சாபமும் அவங்களுக்கு ரொம்ப நல்லாவே ஞாபகம் இருக்குது. இது ஏதேனில், இருந்து அந்த நம்பிக்கை மனுஷங்க இருதயத்துக்குள்ள, இருந்தது. அது இரண்டாம் உலகத்தில் ஜனங்கள் கிட்ட கூட, ஓரளவுக்கு இந்த எண்ணங்கள் இருந்தது. ஜனங்கள் இருதயத்தில் எப்போதுமே தேவன் மேல் பயபக்தி இருந்தது. எதிர்ப்பாப்பு, நம்பிக்கை இருந்தது.

ஆனால் மனுஷனுடைய இருதயம் பற்றி வசனத்தில் வாசிக்கிறோம்....

எரேமியா-17:9

"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?"

எல்லாவற்றை பார்க்கிலும் இருதயம், மகா கேடுள்ளது, திருக்குள்ளது, ஜனங்களுக்கு இந்த முற்பிதாக்கள் வாயிலாக, ஸ்திரியின் வித்து பற்றின நம்பிக்கை இருந்தது. ஆனால் அவங்க இருதயமோ கேடுள்ளதா இருந்தது. அது மாத்திரம் இல்லை, சாத்தான் அவர் என்ன நினைச்சிருந்தார்னா, "தேவன் கிட்ட, உன்னதமானவருக்கு ஒப்பாவேன், இந்த ஜனங்கள் தன்னை வணங்கும் படியாக செய்வேன்". ஒரு **பயங்கரமான தப்பான கொள்கை**, அந்த இடத்திலேயே, கொண்டு வர்றார்.

☞ உண்மையான ஸ்திரியின் வித்து, மெசியா. ஆனால் அந்த உண்மையான ஸ்திரியின் வித்துக்கு, அந்த இடத்தில், நிம்ரோத், செமிராமிஸ் விஷயத்தில் ஒரு பயங்கரமான Duplicated, ஸ்திரியின் வித்து, சாத்தான் உண்டு பண்ணிட்டான்.

☞ அதனால் செமிராமிஸ், நிம்ரோத் போன்ற தீமையானவங்களை சாத்தான் பயன்படுத்தினான். **சர்ப்பம் மாதிரி செய்து, அந்த சர்ப்பத்தை நிம்ரோத் ஈட்டியினால குத்தி கொல்ற மாதிரி, ஒரு சிலை செய்து வைத்திருக்காங்க**. அது தான் False Seed of the

Women. அந்த கல்லை, சிலையை ஸ்தியின் வித்து என்று உண்டு பண்ணிட்டாங்க. இன்னிக்கு, எந்த மதம் எடுத்தாலும், இந்த விஷயம் பார்க்க முடிகிறது. அவங்க கடவுள் சர்ப்பத்தை மிதிக்கிற, இந்த விஷயம் பார்க்க முடிகிறது. ஸ்திரியின் வித்து தவறான போதனை அவங்களுக்குள்ள இருக்கிறது.

☞ நிறைய சொல்லலாம் எகிப்தில், ஓசரிஸ் ஒரு சர்ப்பத்தை மிதிக்கிற, மாதிரி விக்கிரகம். இந்தியாவுல எடுத்திட்டா **“கலியா”** என்ற பாம்பை கொல்றது **“விஷ்ணு”**, என்ற அவதாரம், கொல்கிறது.

☞ ஒரு **“கேன்டிமேவியன்”** என்ற தேசம், அவங்க புராணத்தில் **“தோர்”** என்ற கடவுள், ஒரு பெரிய சர்ப்பத்தை நசுக்கி கொல்ற, காட்சி பார்க்கிறோம். அதே போல கிரேக்கத்துல அவங்க புராணத்துல அவங்க கடவுள் **“அப்பல்லோ”** அங்க கூட ஒரு **பாம்பு**, பேர் **பைசோன்**, இங்லீஷ்ல கூட மலைப்பாம்புக்கு பைசோன் பேர், இப்படி ஒரு விக்கிரகம் இருக்கிறதைப் பார்க்கிறோம். மெக்சிக்கன் தேசத்துல அவங்களுடைய புராணத்துல புனித கடவுள் - **“தியோட்டடல்”** பாம்பு - **காக்கோசிட்மான்**. டெமான்னா பிசாசு காக்கோசிட்மான் அந்த சர்ப்பம் தியோட்டடல் கடவுள், நசுக்கிறது. இந்த ஸ்திரியின் வித்து அதுகூட ஒரு Duplication சாத்தன் செய்து வைத்திருக்கான். இது உலகம் முழுக்க இருக்கிறது. தாய், மகன் வணக்கம் அந்த விக்கிரகம் தான், எசேக்கியேல்-4 -ல் இஸ்ரேல்லுக்குள்ள இஸ்ரேல் ஜனங்கள், அந்த தாய், மகனுடைய விக்கிரகத்தை வைத்து தான் வணங்கிருக்காங்க.

☞ தாய்-ஸ்திரி, மகன்-வித்து. ஆனால் இது சாத்தான் உண்டு பண்ணினது. செமிராமிஸ், நிம்ரோத் விக்கிரகம், இஸ்ரேலில் இருந்திருக்குது. எசேக்கியேல்- 8:3 ல சொல்றோம் வாசல் வடதிசைக்கு எதிராக இருக்கிறது, எரிச்சல் உண்டாக்குகிற விக்கிரகம். தேவன் சொல்றார், அதை பார்த்தா எரிச்சலா இருக்கு, எரிச்சல் உண்டாக்குகிற விக்கிரகம், தேவன் வாக்கு பண்ணிட்டார், உண்மையான ஸ்திரியின் வித்து, சாத்தானை அழிக்கும், இது சாத்தானுக்கு எரிச்சல். சாத்தான் அப்படியே Counterfeit வைக்கிறான்.
இல்லை அந்த ஸ்திரியின் வித்து நிம்ரோத்.
உண்மையான இந்த மனுக்குலத்துக்கு ஒரு இரட்சகர்.

ஸ்திரியின் வித்து கிறிஸ்து அவரை அசிங்கப் படுத்தி Duplicate பண்ணி ஜனங்களை திசை திருப்பறதுக்கு, உண்டு பண்ணினது, இன்னொரு ஸ்திரியின் வித்து, பொய்யான ஸ்திரியின் வித்து. செமிராமிஸ், நிம்ரோத் இது தான் தாய், சேய் அந்த விக்கிரகத்தை இஸ்ரேலில் கூட இருந்துருக்குது.

☞ தேவன் அதை பார்த்து எரிச்சல் பட்டு சொல்றார். இது யார் உண்டு பண்ணது தெரியுமா? எந்த கோணத்துல உண்டு பண்ணது தெரியுமா? அதை போய் என்னுடைய ஜனம் அவங்களுக்கு நடுவில் வைத்திருக்காங்க. இதுக்கு முன்பே இதெல்லாம் நடந்திருக்குது. நிம்ரோத், செமிராமிஸ் காலம் ரொம்ப முன்பே இது எகிப்தில் இருந்து, பாபிலோனில் இருந்து, எகிப்துக்கு வந்து அசீரியா போய் அப்படியே இஸ்ரேல்குள்ள வந்திருக்கிறது. எசேக்கியேல் காலம் ரொம்ப பின்னாடி. தேவன் பார்த்துட்டு ரொம்ப கடிந்து கொள்கிற வார்த்தைகளைப் பார்க்கிறோம். தேவன் வசனத்தில் சொல்லிட்டார், "என்னையின்றி உங்களுக்கு வேற தேவன் வேண்டாம். எந்த விக்கிரகமும் வைக்க கூடாது, ஏற்படுத்த கூடாது".

☞ஆனால் அந்த Mother Son ஈஸிஸ் அன் ஓசரிஸ் அதை பண்ணிருக்கிறதை பார்க்கிறோம். இந்த நிம்ரோத் மரணத்துக்கு பின்பு கடவுள் ஆக்கப்பட்டார். இந்த செமிராமிஸ் பயங்கரமான தந்திர வேலைகள் செய்தாங்க. உலகத்துக்கு இந்த மந்திர தந்திரங்கள், அமானுஷ்ய வேலைகள் அறிமுகப்படுத்தின தேசம், கல்தேயர், தானியேல் புஸ்தகத்தில் அந்த சொப்பனத்தில், கல்தேயரை எல்லாம் கூப்பிட்டு நேபுகாத்நேசர் நிறுத்துனார். கல்தேயர் தேசம், பாபிலோனில் ஒரு முக்கியமான பகுதி, இங்கிருந்து தான், மந்திர தந்திரங்கள், இந்த தீய சக்தினால் செய்யப்படுகிறது, உலகத்துக்கு தெரியும். அறிமுகம் ஆனது பாபிலோன் உண்டாக்குனதே நிம்ரோத். Historians சொல்றாங்க, இவைகளுக்கு அத்தனைக்கும், காரணம் நிம்ரோத். நிம்ரோத் மரிச்சதுக்கு பின் அவங்க மனைவி, தாய், செமிராமிஸ்-க்கு அத்தனை மந்திரமும் தெரிந்தது மூலம் ஒரு விநோதமான முறையை உண்டாக்கினாங்க. நிம்ரோத் மரிச்சிட்டார்.

☞ **"ஆனால் அவர் தான் ஸ்திரியின் வித்து, அவர் மரிச்சாலும் உயிரோடு எழுந்து கடவுளாக மாறிட்டார்"** என்று, அந்த ஒரு நம்பிக்கையை கொண்டு வந்தாங்க. அதுக்கு ரொம்ப ரகசியமான வேலைகள் செய்திட்டாங்க.

ஏன்னா இந்த மந்திர தந்திரங்கள் எல்லாம் வைத்து அவரை உயிரோடு கொண்டு வர மாதிரியான ஏற்பாடுகள் செய்யனும் என்றால் கூட அவங்களுக்கு தைரியம் இல்லை. நிம்ரோத்தையே கொலை செய்தவங்க, இவங்களை கூட கொலை செய்திடுவாங்க,

☞ **அந்த பயத்தினால Hidden Place ரொம்ப மறைவான சூழலுக்கு மத்தில, இந்த மாதிரியான சடங்காச்சாரங்களை எல்லாம் பண்ணி, அவரை எழுப்புறதாக ஒரு கற்பனை, ஒரு நம்பிக்கையை ஜனங்களுக்குள்ள, உண்டு பண்ணிட்டாங்க.**

ஆனால் ரொம்ப Practical-ஆக பண்ணாங்க. இந்த விஷயத்துல யாராவது நுழைந்து பார்க்க வேண்டும் என்றால், உயிரோடு வந்த நிம்ரோத்தை பார்க்கனும் சொன்னால், அவங்க முதல்ல சில வாக்குறுதிகள் கொடுக்க வேண்டும்.

இந்த விஷயத்தை, நாங்க வேற யாருக்கும், out பண்ண, சொல்ல மாட்டோம் என்று வாக்குறுதி கொடுக்க வேண்டும். அப்புறம் அவங்களுக்கு சில Holy oil **கொடுத்திருக்காங்க. பரிசுத்தமான எண்ணெய் அவங்களுக்கு கொடுக்கப்படும், அந்த எண்ணெய் உடம்பில், வாயின் வழியாக போகும் போது கூட அவங்களுக்குள்ள ஒரு மாதிரியான போதை உண்டு பண்ணும். அதாவது அவங்க சுய நினைவுகளை இழக்க வைத்து விடும். அவங்க யாரோ ஒருத்தருடைய Control-ல இருப்பாங்க. வித விதமான Music, விதவிதமான காட்சிகள், அவங்க கண் முன்னாடி பார்ப்பாங்க**. அவர்கள் வேறு எங்கோ இருக்கிற மாதிரி, தோரணை உண்டு பண்ணி, **பயத்தின் உச்சியில், அவங்க போகும் போது, திடீரென்று ஒரு ரூபம்**, அவங்க மத்தில உருவாகுறது, அது தான் **நிம்ரோத். மரணத்துல இருந்து வெளில வந்திட்டார்**, என்று காட்சிகள் அவங்களுக்கு காண்பிக்கப்பட்டது.

இது அப்போ இருந்த ஜனங்கள் மூலம் எல்லா இடத்திற்கும் பரவப்பட்டது. இப்படி தான், அவங்க நிம்ரோத்தை, பெரிய கடவுள் என்று எல்லா கடவுளுக்கு மேலான கடவுள் என்று பட்டமெல்லாம் கொடுத்திருக்காங்க. இது எல்லாமே எகிப்தில் ஓசரிஸ் விஷயத்துல நடந்து முடிந்தது. எகிப்து விட்டுட்டு இன்னும் ஒரு தேசம் பார்க்கலாம்.

☞ கிரேக்க புராணம், அங்க கூட கடவுள் பேர் **"Bacchus"** (பாக்கஸ்). இவர் தான் கிரேக்க கடவுள், இவர் கூட நிம்ரோத்துக்கு, தொடர்புள்ளவராக இருக்கிறார். இந்த கடவுளை அவங்க எப்படி காண்பிக்கிறாங்க என்றால், இவர் வேற ஒரு Costume-ல் இருக்கார். இவர் புள்ளி மானுடைய தோல் உடுத்திட்டு இருக்கார். **இதுக்கும் சிறுத்தையின் தோலுக்கும் வித்தியாசம் இருக்கா? அதுவும் தோல் புள்ளி, இதுவும் தோல் புள்ளி,** அது எகிப்துல ஓசரிஸ் இது அடையாளப்படுத்தினது வேட்டைக்காரனாகிய நிம்ரோத். கிரேக்கத்துல **"பாக்கஸ்" புள்ளி மானுடைய தோல்** உடுத்திட்டு இருப்பாங்க. கிளியரா இது கூட நிம்ரோத், என்று காண்பிக்குது. இது இன்னும் கூட Conform பண்ணலாம். பாக்கஸ் என்ற வார்த்தையின் அர்த்தம் - "**அழுகை**". உதாரணத்துக்கு சங்கீதம் 84:6 அழுகையின் பள்ளத்தாக்கு, இதில் எபிரேய வார்த்தை, **பாக்கா** வருகிறது, **Bakha** பாக்கா for அழுகை.

☞ இந்த பாக்கஸ் கடவுளுக்கு அந்த தேசத்தில், ஒரு பண்டிகை ஏற்படுத்துவாங்க. அந்த பண்டிகையில் ஒரு புள்ளி மானை எடுத்து, துண்டு துண்டாக வெட்டி வைத்து, பெண்கள் எல்லாம் ஒரே அழுகை அழுதிட்டு இருக்காங்க. இது அப்படியே காண்பிக்குது, நிம்ரோத்தை இப்படி தான் வெட்டிட்டாங்க, கொலை செய்திட்டாங்க. அந்த துக்கத்துக்கு அவங்க அழுகிறது. இந்த அழுகை கிரேக்கத்தில் இது நடக்குது.

எசேக்கியேல்-8:13,14

"பின்னும் அவர்கள் செய்கிற அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று அவர் என்னுடனே சொல்லி, என்னைக் கர்த்தருடைய ஆலயத்து வடக்கு வாசலின் நடையிலே கொண்டு போனார்; இதோ, அங்கே தம்மூசுக்காக அழுதுகொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்."

இஸ்ரேல் ஸ்திரிகள் தம்மூஸ்க்காக, அழுது கொண்டிருந்த ஸ்திரிகள் இந்த தம்முஸ் தான் ஓசரிஸ், ஓசரிஸ் தான் நினஸ், நினஸ் தான் நிம்ரோத், தம்மூஸ்க்காக அழுகிற விஷயம் கிரேக்கத்தில் பாக்கஸ்-க்காக ஸ்திரிகள் அழுகிறாங்க. எல்லாமே ஆதியாகமத்தில், இரண்டாம் உலகத்தின் துவக்கத்தில், நிம்ரோத் Character வரும், ரொம்ப உறுதியா எல்லா புராணங்களிலும், நம்ப தகுந்த படிக்கு, இருப்பதை பார்க்கிறோம். இது கிரேக்குல இருந்தது. ☞ நிம்ரோத் அல்லது நினஸ் அல்லது ஓசரிஸ் அல்லது பாக்கஸ் இன்னும் ஒரு, ஒரு ஊரில் ஒரு, ஒரு பேரில் வித, விதமா இருக்கிற கடவுள்கள், எல்லாமே இந்த நிம்ரோத்துக்கு, ரொம்ப அருமையா தொடர்பு இருக்கிறது. இவர் தான் அவங்களுக்கு கடவுள், இரட்சகர் மரிச்சாலும் உயிரோடு வந்தவர், மரிச்சி போனவங்களையும், உயிரோடு கொண்டு வருபவர், என்ற நம்பிக்கை எல்லாம் ஜனங்களுக்கு இருந்தது.

☞ இந்த ஓசரிஸ் எகிப்துல மரிச்சதுக்கு அப்புறம் அவரை மீண்டும் கொண்டு வர்றதுக்கு, அவருடைய சரீரத்தை எல்லாம் கூட்டி வைத்து, மந்திர தந்திரங்கள் எல்லாம் செய்து, சில மூலிகை எல்லாம் பயன்படுத்தி, அவரை மீண்டும் எழுப்புனாங்க. இது தான் எகிப்தில் நடந்தது. தங்கள் கடவுள் மரிச்சாலும், மரிச்சதுக்கு அப்புறம், இந்த மாதிரியான செயல்பாடுகள் மூலம், மீண்டும் உயிரோடு வந்தது, ஜனங்கள் எப்படி எடுத்திட்டாங்கன்னா, அவங்க வாழ்க்கையில் அப்படியே, பயன்படுத்த ஆரம்பிச்சாங்க. அதனுடைய விளைவு தான், எகிப்துல ஒரு ஸ்பெஷல் விஷயம், மம்மி பண்றது. மரிச்சி போனால், மீண்டும் திரும்ப வந்திடலாம், அதுக்கு மரித்தவங்களுடைய சரீரம் வேண்டும். அதுக்கு மூலிகை எல்லாம் வைத்து, மம்மி பண்ணி, பதப்படுத்தி, வைத்து இருக்க வேண்டும். இப்படி தான் எகிப்துல உருவானது.

இது உலகத்துக்கே ஒரு பெரிய அபூர்வமான விஷயம். ரொம்ப ஆச்சர்யம், ஆயிர வருஷத்துக்கு முன் இருந்த சரீரம் எல்லாம், இன்னிக்கு கூட பிரமிட்குள்ள இருக்குது. ☞இந்த மம்மிபிக்கேஷன் நிம்ரோத் உயிரோடு எழுப்பப்பட்டதாக சொல்லுகிற சம்பவத்திலிருந்து, இவர்கள் எடுக்கிறாங்க. ஒரு சிலரால இன்னிக்கு பேச முடியும். இப்படி ஒரு பழக்கம் இருக்கு, அங்க அப்படி ஒரு பழக்கம் இருக்கு, இங்க ஒரு சம்பிரதாயம் இருக்கு, அப்படியே எல்லாத்தையும் தூக்கி கொண்டு வந்து, பைபிளில் வைக்கும் போது, ஒரு வேளை, முயற்சி பண்ணினால், மற்ற விஷயங்கள் கூட, அதே போல தான் அதன் மூலம் ரொம்ப அருமையான ஒரு உண்மை வெளியாகுது.

☞ எகிப்தியருக்குள்ள **மனம் திரும்புதல்** என்ற வார்த்தையே இல்லையாம், பாவம் எல்லாம் ஒன்னும் இல்லை, வாழ்ந்தியா, செத்து போனியா, கவலைபடாத மறுபடியும், உயிரோட கொண்டு வந்திடலாம். இதை எகிப்து பாஷையில் புதிய ஏற்பாடு எழுதும் போது மனம் திரும்புதல் பற்றி, நிறைய கர்த்தர் இயேசு பேசிருக்கார். பாவிகள், பாவிகள் என்று உணர்ந்து, மனம் திரும்பனும், புதிய ஏற்பாடுல இருக்குது. எகிப்தில் Translation பண்ணும் போது **மனம் திரும்புங்கள்**, என்ற வார்த்தையே **இல்லை**. அப்ப கிரேக்குல இருந்த வார்த்தையை அப்படியே போட்டுட்டாங்க. அந்தளவுக்கு, ஜனங்கள் கிட்ட மனம் திரும்புவதில், நம்பிக்கை கிடையாது. அவங்க வணங்குன கடவுள் நிம்ரோத், அவர் எழுந்தது, அவர்கள் அப்படியே கடைபிடிக்கிறாங்க. இந்த நிம்ரோத் அவர் சம்பந்தப்பட்ட விஷயங்கள் தான், இன்னிக்கு வரைக்கும், கிறிஸ்தவர்கள் கிட்ட கூட இருக்குது. உதாரணம் இந்த பொய்யான மேசியா நிம்ரோத். இந்த ஸ்திரியின் வித்துக்கு இன்னொரு ☞....பேர் பைபிளில் **"பாகால் பேரீத்"**. வசனம்,

நியாயாதிபதிகள்-8:33

"கிதியோன் மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் பாகால்களைப் பின்பற்றிச் சோரம்போய், பாகால்பேரீத்தைத் தங்களுக்குத் தேவனாக வைத்துக் கொண்டார்கள்."

இந்த எகிப்தியர்கள் மற்ற அந்நிய ஜனங்கள், இப்படியாக நிம்ரோத்தை ஸ்திரியின் வித்தாக பொய்யான மேசியாவாக விசுவாசித்தாங்க. இந்த நிம்ரோத்துக்கு பாகால் பேரீத் என்று கூட பேர் இருக்கிறது. இஸ்ரேல் ஜனங்கள் கிதியோன் மரணத்துக்கு பின் தொழுதிட்ட பாகால் பேரீத் வேற யாரும் இல்லை. "The False Meshaiah" நிம்ரோத். இது எகிப்தில் கிரேக்கில் இன்னும் பக்கத்தில் பரவியிருந்தது. இஸ்ரேல்குள்ள கூட வந்தது என்று பார்க்கிறோம்.

☞ இவர் கொலை செய்யப்பட்டு மரிச்சி, மறுபடியும் உயிர்த்தெழுந்து வந்த ஒரு சிறப்பு, ஒரு கடவுளாக மாறினது. அதே தான் முக்கியமான ராஜ்யங்களில் ரோம், பாபிலோன், கிரேக்கம் இங்கெல்லாம், விசேஷமான பண்டிகையை ஜனங்கள் கொண்டாடினார்கள். நிம்ரோத் மரணம், உயிர்த்தெழுந்ததை கடவுளாக மாறினதாக நம்பிட்டு விசேஷமாக டிசம்பர் 25 அந்த பண்டிகை கொண்டாடுவாங்க.

☞ இந்த ராஜ்யங்களில் பாபிலோன், எகிப்து, கிரேக்கம், ரோம் இங்கெல்லாம், நிம்ரோத், செமிராமிஸ். தாய், சேய் வணக்கம், ஸ்திரியின் வித்து வணக்கம். False ஸ்திரியின் வித்து வணக்கம். எல்லா பக்கமும் இருக்கும் போது, **இவர் உயிரோடு வந்த சம்பவத்தை, நினைவுபடுத்த, டிசம்பர் 25-ஐ சிறப்பாக கொண்டாடுவாங்க**. போப் மார்க்கம் சபை மேல் ஆதிக்கம் செலுத்தி கொண்டிருக்கும் போது, அவர்கள் பார்த்தாங்க, இந்த ராஜ்யங்கள் இருக்கிற ஜனங்கள் எல்லாம் கிறிஸ்தவத்துக்குள்ள கொண்டுவரனும், இப்ப அவர்கள் விமர்சையாக, கொண்டாடிட்டு இருக்கிற, அந்த ஒரு பண்டிகையை கிறிஸ்துவின் பிறப்பாக கொண்டாடுவோம் என்று அறிவிப்போம்.

☞ இன்னிக்கு **"டிசம்பர் 25 கிறிஸ்மஸ்"** கிறிஸ்துவின் பிறப்போடு பேசப்படுகிறது. ஆனால் தேவனுடைய கிருபையில் தேவனுடைய வார்த்தைகளை அறிந்த ஜனங்களாக நமக்கு தெரியும், கர்த்தர் இயேசுவுக்கும், டிசம்பர் 25-க்கும், எந்த சம்பந்தமும் **இல்லை**. இப்படி தான், வந்தது.

Actual-லா டிசம்பர் 25-க்கும், கிறிஸ்தவர்களுக்கும், எந்த சம்பந்தமும் இல்லை. அது சபையைப் பலப்படுத்தவும், அந்நிய ஜனங்கள், அந்நிய தேவர்களை, வணங்கிட்டு இருந்தவங்களை, கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதற்கும், அந்த அந்நிய தேவர்களை வணங்கும் விதமாக, அவர்கள் கொண்டாடிட்டு இருந்த டிசம்பர் 25 ஐ, போப் மார்க்கம் கிறிஸ்துமஸாக, மாற்றியது. நம்மூர்ல எல்லாம் அந்தளவுக்கு கொண்டாட மாட்டோம். கிறிஸ்மஸ் ஈவ் இருக்குது.

☞ கிறிஸ்மஸ்க்கு முந்தைய நாள், வெளி நாடுகளில் ஒரு கட்டையை எடுத்திட்டு, ப்யூ லாக் அப்படின்னு ஒரு மரம், அந்த கட்டையை, துண்டு துண்டா வெட்டி எடுத்து, அக்கினில போட்டுடுவாங்க. அடுத்த நாள் கிறிஸ்மஸ், Chiristmas Tree பச்சைபசேல்ன்னு, இருக்கும். அடுத்து அதுல சில Decorations எல்லாம் இருக்கும். முக்கோணம், உருண்டையா இது எல்லாம் Gift இதெல்லாம் அந்த நிம்ரோத்தின் பிறப்பை கொண்டாடுனதினால், அந்த கட்டையை, வெட்டி போட்டது மாதிரி தான் - நிம்ரோத்தை கொலை பண்ணாங்க. ☞ அப்படி மரிச்சாலும், மீண்டும் உயிரோடு வந்திட்டு, Everlasting அப்படின்னா நித்திய, நித்தியத்துக்கும் இருக்கிறார். அதுனால தான், EverGreen Tree வைக்கிறாங்க. அதுமாத்திரம் இல்லை. அதோடு சில Gift கொடுக்கிறாங்க. நிம்ரோத் அங்க தருகிறார். அந்த ஸ்திரி விஷயத்துல இருக்கு. ஆனால் இன்னிக்கு மகா பாபிலோனில் இதெல்லாம் பார்க்கிறோம். சபை இன்னிக்கு தப்பாக நடக்க காரணமாகிட்டு. அது மட்டும் இல்லை எகிப்துல ஓசரிஸ் கடவுளுக்கு ஒரு அடையாளம் காளை. காளைக்கு அசீரிய பாஷையில் அர்த்தம் ரூலர் ஆளுகை செய்கிறவர். நிம்ரோத், பராக்கிரமசாலி, கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரன். அந்த அர்த்தம் கொள்ளுகிற அடையாளம் வைத்திருக்காங்க. ☞ இஸ்ரேல் ஜனங்கள், மோசே மலையிலிருந்து வர Late ஆனவுடனே கன்று குட்டி செய்தாங்க. பக்கத்தில் இந்த காளை நிம்ரோத்துக்கு பயன்படுத்திட்ட ஒரு விஷயம். இது அப்படியே அங்கிருந்து எடுக்கிறதை பார்க்கலாம்.

கடைசியாக அந்த பாகால் அஷ்டரோத் பார்க்கலாம்.

☞ **பாகால், அஷ்டரோத்**, அக்கினி தேவன், அக்கினி தேவதை, Sun Fire Woreship செமிராமிஸ்க்கு மகன் நிம்ரோத். கல்தேயர் பாஷையில் நிம்ரோத்துக்கு செரோஸ்டா என்று பேர். செரோ- த சீட் (The Seed) வித்து. ஆஸ்டா-Women செரோஸ்டா The Seed of the Women ஸ்திரியின் வித்து நிம்ரோத். கல்தேயர் பாஷையில் இந்த ஆஸ்டா-க்கு ஸ்திரி என்று அர்த்தம். இன்னொரு அர்த்தம் இருக்கு Fire ஸ்திரியின் வித்தாகிய, நிம்ரோத் அக்கினியின் மகனாக கூட, ஆகுறார். அவர் **மரணத்துக்குள்ள போய் மீண்டும் எழுந்து வந்ததை**, அவங்க

அவர் அக்கினிக்குள்ள போய் பிறந்து வந்தார் என்று, கல்தேயர் பாஷையில் இந்த பேர் வைத்திருக்காங்க.

☞ சூரிய கடவுள் வணங்கிட்டு இருந்த ஜனங்கள், தலைவர் பேர் செரோஸ்டா. செரோஸ்டா, ஸ்திரியின் வித்து, அக்கினியின் புத்திரர் ஒரு கல்தேயர் என்று சொல்றாங்க. அவங்க நம்பிக்கை அந்த செரோஸ்டா வேற யாரும் இல்லை ஸ்திரியின் வித்து **நிம்ரோத்**. நிம்ரோத் தான் பாபிலோனை உண்டு பண்ணினவர். அதில் ஒரு பகுதி தான் கல்தேயா. இந்த அக்கினி தேவன் வணக்கம், நிம்ரோத் கூட, தொடர்பாகிறதை பார்க்கிறோம். ☞செரோஸ்டா-அக்கினி கடவுள் அதுக்கு பேர் பாகால் பழைய ஏற்பாட்டில் வருகிற பாகால் அக்கினி கடவுள். அது தெளிவா நிம்ரோத்தை குறிக்கிறது. நிம்ரோத் பாபிலோன் மீதான முதல் ராஜா, பட்டணம் உண்டு பண்ணினார், ராஜா போல இருந்தார், அதுனால அவருக்கு இன்னொரு பேர் மோளேக் அப்படின்னா, கிங் முதல் ராஜா நிம்ரோத்.

➔ மோளேக் யார்?

நிம்ரோத். பால் என்ற சூரிய கடவுள். நிம்ரோத் உயிர்த்து எழுந்ததுக்கு அப்புறம். அவர் சூரிய கடவுள், பால், பாகால். ஆனா பூமியில் அவர் பிரதிநிதி - ராஜா மோளேக். அதுனால தான் மோளேக்குக்கு பாகால் மேடையை கட்டுனாங்க. இது வந்து பூமியில் நிம்ரோத்தை குறிக்கிறது. அதுக்கு அப்புறம் உயிர்த்தெழுந்து போனதுக்கு பின் பாகால் சூரிய கடவுள். இப்ப பாகால் மோளேக் பேர் நிம்ரோத்துக்கு வருது. இது எல்லாம் ஆராய்ச்சி பண்ணி கொடுக்கிறாங்க.

எரேமியா-32:35

“அவர்கள் மோளேகுக்கென்று தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணும்படி இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலிருக்கிற பாகாலின் மேடைகளைக் கட்டினார்கள்; யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணுவதற்கு அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யவேண்டுமென்று நான் அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அது என் மனதிலே தோன்றினதுமில்லை.”

➔ மோளேக்குக்கு பாகால் மேடையை கட்டினார்கள். அங்க, அவங்க பிள்ளைகளை, தீக்கடக்கப் பண்ணினாங்க. குழந்தையை அக்கினில போடும் போது, அழுகை சத்தம் கேட்க கூடாது என்று, பயங்கர டிரம்ஸ் அடிப்பாங்க, அது தான் தோபேத். அது தேவனுக்கு இஷ்டம் இல்லை சபிச்சிட்டார். அந்த பள்ளத்தாக்கு அதையெல்லாம் கர்த்தர் இயேசு ஞாபகப்படுத்துறார், இன்னோம் பள்ளத்தாக்கு சொல்றார். கிரேக்க வார்த்தை கெஹன்னா நரகத்திற்கு அடையாளம். இந்த விக்கிரகம் வணக்கம் சகலத்துக்கும் காரணம்

➔ நிம்ரோத், அவருக்கு பின் சாத்தான் இருந்து இந்த வேலைகள் செய்றான். இப்பிரபஞ்சத்தின் தேவன் எல்லாரையும், இரண்டாம் மரணத்துல போடப்போறார். அந்த

இரண்டாம் மரணத்துக்கு அடையாளமா இன்னோம் பள்ளத்தாக்கை வைக்கிறார். இது சாத்தான் ஞானத்தில் செய்றார், ஆனால், அவரையும் அவரோடு கூட இருக்கிறவங்களையும், இரண்டாம் மரணத்துல போடப்போறார். அதை கர்த்தர் இயேசு தொடர்புப்படுத்தி காண்பிக்கிறார்.

பல சாட்சியங்கள் பதிக்கப்பட்ட பள்ளத்தாக்கு இன்னோம் பள்ளத்தாக்கு என்று பார்க்கிறோம். புராணங்களில் இருக்கிற நம்பிக்கைகள், இது மாதிரி, நிறைய விஷயங்கள், ஓரளவுக்கு வேதத்தில் உள்ள விஷயங்களுக்கு பொருந்துகிறது. ஆனால், எல்லாமே சாத்தானுடைய மிக பயங்கரமான, தந்திரங்களாக, ஜனங்களுக்குள்ள, வஞ்சனையாக, போய் கொண்டு இருக்கு. மெய்யான தேவன், அவருடைய குமாரன், இந்த உலகத்தின் இரட்சகர், இந்த காரியங்களையெல்லாம், தப்பிதமாக உலகத்திற்கு அறிவித்து, ஜனங்களை தேவனை விட்டு, வழி விலக செய்ய, இந்த காரியங்கள் எல்லாம் நடந்து முடிந்திருக்கிறது.

➔ ஆனால், இது இன்னிக்கு **"ஏற்ற காலம்"**, ரொம்ப காலமா இன்றைக்கும் கூட, உலகத்தில் உள்ளவர்களுக்கு புரியாது. தேவனுடைய பிள்ளைகளுக்கு **மறைவானது ஒன்னும் இல்லை**. ரகசியங்கள் வெளி வரக்கூடிய **காலம்**, இந்த ரகசியங்கள் எல்லாம் ரொம்ப ரகசியமாவே, இருந்தது. பழைய பாபிலோனின் ரகசியம், புது பாபிலோன் ரகசியம், இது இரண்டும் ஜனங்களுக்கு வெளியாகுற காலம்.

அந்த ஒரு கிருபையில தான் இதை நமக்கு வெளிப்படுத்திருயிருக்கிறார். சரி, நிம்ரோத் இப்படியாகிட்டார்.

☞ செமிராமிஸ் என்ன ஆனாங்க?

அவங்களையும் கடவுளாக மாற்றிட்டாங்க. அந்த செமிராமிஸ் தான் வசனத்தில் வாசிக்கிறோம், Queen of Heaven - **"வானராக்கினி"**. சிரீயா தேசத்தில் செமிராமிஸை **"ஆஸ்ட்டரேத்"** என்று கூப்பிடுவாங்க. அது பைபிளில் அஷ்டரோத் என்று இருக்குது. ஆஸ்ட்டரேத்தில் இருந்து தான் வந்த ஆங்கில வார்த்தை **"இஸ்டர்", "ஈஸ்டர்"** இது கிரிஸ்தவர்கள் அனுசரிக்கிற "ஈஸ்டர் பண்டிகை".

☞ அது **"அஷ்டரோத்துக்கு"** ஏறெடுக்கிற பண்டிகை.

தேவன் சொல்லிட்டாங்க, இது எல்லாமே பழைய பாபிலோனில் இருந்தது அப்படியே ரொம்ப நல்லா போப் மார்க்கத்திலும் இருப்பதை சரித்திரத்தில் பார்க்கிறோம். தேவன் எடுத்திட்டார் "நீ சபையில்லை, **மகா பாபிலோன்**." பழைய பட்டணத்துக்கு பாபிலோன் ஆனால் இவங்க மகா பாபிலோன். எல்லாத்தையும் ஒரே இடத்தில் Mix பண்ணி, உண்மையான தேவனுடைய ஜனங்களை, வஞ்சித்து இருக்கிறது. இவங்க மூலமா, நட்சத்திரங்களை வழிபடுறது உண்டானது.

யோபு-38:31-ல் "அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ? அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ?"




➔ மிருக சிருஷத்தின் கட்டுகளை நீ அவிழ்ப்பாயோ? மிருக சிருஷம் வானத்தில் இருக்கும். Winter Season-ல இது தெரியும். இன்னிக்கு Night கூட பார்க்கலாம். முதல் மூன்று நட்சத்திரங்கள் வைத்து கண்டுபிடிக்கலாம். இது உண்மையான ரூபம் ஒரு Hunter வேடன் வருவார், **"மிருகசிருஷ நட்சத்திரத்தில்"**, அந்த வேடன் தான் நிம்ரோத். அப்படி அவங்க சொல்லிட்டு நட்சத்திரங்களை, வணங்குற பழக்கத்தை உண்டு பண்ணிட்டாங்க. வானத்துல ரொம்ப Clear-ஆக இருக்கும்.




➔ அதை ஜாயிண்ட் பண்ணினால் **கையில், ஒரு வில் பிடித்திருக்கிற மாதிரி**, இருக்கும். ஓரியன் இது நிம்ரோத் தான் என்று சொல்லிட்டாங்க. ராசிகள் சொல்வாங்க இல்லையா, **"கன்னி ராசி"**, அது தான் செமிராமிஸ் வரும், இது எல்லாமே புராணங்கள். ஆனால் நம்பிக்கைக்குரிய விஷயங்களாக எங்கிருந்தோ வந்திட்டு, நிம்ரோத் சரித்திரத்துல Mix ஆகுறது பார்க்கிறோம்.


☞அதே போல தான் கடல் கன்னிகள், பாதி மாடு, பாதி மனுஷன், கலந்த கடவுள். இது எல்லாம் எதாவது ஒரு வகையில் இவங்களுக்குள்ள தொடர்பு இருக்கிறது. இது நாமாக தொடர்புப்படுத்தி பார்க்க முடியாது. ஆனால் உலகத்தின் அஞ்ஞான மார்க்கத்தில், இருக்கிற அஞ்ஞானிகள், ஜனங்களுடைய நம்பிக்கை விசுவாசம் இருக்கிற பிரகாரமா நாம கொஞ்சம் எடுத்து வைத்து வேதத்தோடு பார்க்கும் போது Clear-ஆக தெரியுது. இது எப்படியெல்லாம் இருக்குது, இதெல்லாம் சாத்தான் ஜனங்களை வஞ்சிக்கக் கூடிய தேவனுக்கு விரோதமா ஏற்படுத்திட்ட, விநோதமான காரியங்கள்.

☞ தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவன், தெய்வீக திட்டம், அவருடைய குமாரன், அவருடைய பரிசுத்த ஆவி, அதனுடைய வல்லமை பற்றி எல்லாம் நமக்கு நல்லா தெரியும். இது எல்லாம் நிம்ரோத் காலத்திலேயே நடந்தது எப்படி உலகம் முழுக்க போனது என்றால், ஒரே ஒரு Point பாபேல் கோபுரம். பாபேல் கோபுரம் கட்டுற வரைக்கும், உலகம் முழுக்க


ஒரே பாஷை, ஜனங்கள் எல்லாம் பாபேல் கோபுரம் கட்ட இருந்துட்டாங்க. அவங்களுக்கு நிம்ரோத், செமிராமிஸ் தான் தெரியும்.







➔ நிம்ரோத் அப்பாவைக்கூட தெரியும், அங்கயே **திரித்துவத்துக்**கான Basic-க்கே ஆரம்பிச்சிடுச்சி. எப்படின்னா, **நிம்ரோத், நிம்ரோத் அப்பா, நிம்ரோத் அம்மா** மூன்று பேரும் கடவுள் போல் இருந்துட்டாங்க. இந்த தாய், சேய் வணக்கம் தப்பான ஸ்திரியின் வித்து நம்பிக்கை, அது சம்பந்தமான விஷயங்கள் இதெல்லாம், அந்த ஜனங்களுக்கு தெரியும். ஆனால் தேவன் அந்த கோபுரம் கட்டும் போது பாஷையை தாறுமாறக்குறார். அந்த பாஷைகளின் அடிப்படையில், உலகம் முழுக்க சிதறி போன ஜனங்கள் மூலம் உலகம் பெரிசா வளர்ந்திட்டாலும், சிதறி போனவங்க ஆரம்பத்தில் பாபிலோனில் இருந்து தான் போனாங்க. நிம்ரோத், செமிராமிஸ், நிம்ரோத் அப்பா இவங்களை தெரியும். Even **முக்கடவுள்** வணக்கம் கூட அங்கிருந்து வந்திருக்கிறது.





➔ ஜனங்கள் எங்க போய் செட்டில் ஆனாலும், பாபிலோனில் இருந்து எடுத்து சென்ற நம்பிக்கை, உலகம் முழுக்க பார்க்க முடிகிறது. இது

தேவனுடைய கிருபையில் நாம் இங்க பார்த்தோம். சில சமயங்களில், தேவனுடைய வார்த்தைக்கு சாட்சி கொடுக்கும் போது மற்ற ஜனங்களுடைய, கேள்விகள் எல்லாத்துக்கும் வேதத்தின் மூலம் ஆதாரத்தை, நாம் சொல்ல வேண்டியது அவசியம். அந்த விஷயங்கள் மெய் தேவனுக்கு நல்ல சாட்சியாக இருக்க, நம்மை பலப்படுத்தக் கூடியவை.






| Nation | Father-Husband | Son | The Woman |
|---|---|---|---|
| Asia | | Decius | Cybele |
| Assyria | Winged bull | | |
| Babylonia | Lord of Heaven | | |
| Babylonia | Ninus | Tammuz | Queen of Heaven |
| Chaldea | Bal | | Ishtar |
| Chaldea | Cahna-Bel (Cannibal) | The Seed | |
| Chaldea | Molech | | Ashtaroth |
| Chaldea | Zoroaster | The Seed of the Fire | |
| China | | Child | Madonna |
| Egypt | Apis bull | | Cow of Athor |
| Egypt | Osiris | Horus | Isis |
| English | The Devil | | |
| Greece | Bacchus | | Rhea |
| Greece | Capricornus | | Astarte |
| Greece | Kissos | | Mother of gods |
| Greece | Kronos | | Aphrodite |
| Greece | Orion | Babe | Ceres |
| Greece | Saturn | | Venus |
| Greece | | Plutus | Irene |
| India | Vishnu | Christina | |
| India | | Tsi | Eswara |
| Italy | Pope | | Virgin Mary |
| Japan | | Child | Madonna |
| Nineveh | Nimrod | Nimrod | Semiramis |
| Palestine | Baal | | |
| Persia | Sun | | Moon |
| Persia | Sun God | | |
| Persia | | Child | Madonna |
| Philistia | Dagon | | |
| Rome | Jupiter | Jupiter Puer | Fortuna |
| Scandinavia | Woden | Thor | Frieda |
| Thibet | | Child | Madonna |



**(இரண்டாம் உலகத்தின் ஆரம்பத்தில் நிழலான நேரடியான பாபிலோன் அதின் நியாயத்தீர்ப்பை தேவனிடம் பெற்றது போல, இரண்டாம் உலகத்தின் முடிவிலிருக்கும் அடையாளமான பாபிலோன் பெற்றுக்கொள்ளும்.இன்று ஒன்றான மெய்தேவனை அறிந்துகொண்ட நாம் அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுக்கொள்வோம.)**

"உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி **பிதாவானவர்** விரும்புகிறார்."

யோவான் 4:23

---

**தேவன் தாமே அவருடைய வார்த்தைகளை**
**புரிந்துகொள்ள பரிசுத்த ஆவியை**
**தந்து ஆசீர்வதிப்பாராக!!**

---

----------**ஆமென்!!**----------

